9-4-2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. தகவல் கோரல்—** | |
| அரசு ஊழியர் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் | 255-264 |
| **2. மானியக் கோரிக்கைகள், 2003-2004 விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி— | 260,265-354 |
| (அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல் | |
| (ஆ) கோரிக்கை எண் 22 - உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 309-349 |
| திரு. ஜி.கே. மணி | 264-286 |
| திரு. எச். ராஜா | 286-293 |
| திரு. செ.கு. தமிழரசன் | 293-302 |
| *திரு. லா. சந்தானம் | 303-309 |
| **3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 354-355 |



HPT/2004

C

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 26, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**
**2003 ஏப்ரல் 9, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

***"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்***
***அடிதழீஇ நிற்கும் உலகு"***

*குடிமக்களை அன்புடன் நன்கு பாதுகாத்து நீதிநெறி தவறாது நல்லாட்சி செய்யும் அரசனுடைய அடிகளைப் பொருந்தி உலகம் நடக்கும்.*

*[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. தகவல் கோரல்

### அரசு ஊழியர் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம்

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை. அரசு ஊழியர்கள், அரசினுடைய பேச்சு வார்த்தை தோல்வியுற்று இருப்பதாக செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. அதையொட்டி நாளைய தினம் அரசு ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நடத்த இருப்பதாகவும், உண்ணாநோன்பை மேற்கொள்ள இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அரசு 'எஸ்மா' பாயும் என்று அவர்களை அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறது. இந்த நிலை நமக்கு நல்லதல்ல. அரசு ஊழியர்களுடைய கோரிக்கைகள் என்ன என்று அறிந்து அவர்களிடத்திலே முழுமையான பேச்சுவார்த்தை நடத்தி அதற்குப் பரிகாரம் காணவேண்டுமே தவிர அவர்கள் மீது 'எஸ்மா' பாயும், 3 ஆண்டு சிறைவாசம் கிடைக்கும், வேலை இழக்க வேண்டிய நிலை வரும் என்று அச்சுறுத்துவது எந்த வகையிலே சரியாக இருக்கும்? எனவே இந்த அவையினுடைய இதர அலுவல்களை முழுமையாக ஒத்திவைத்து அதைப்பற்றி முழுமையாக ஒரு விவாதம் இங்கே நடத்த வேண்டும்— ஒத்திவைத்து விவாதம் நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

…நாடு ஆவணக் காப்பகம்
184539
^J 00B



அதேபோல் இன்னொரு முக்கியமான பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் ஒத்திவைப்பு பிரச்சினை எல்லாம் இல்லை என்று ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இருக்கலாம். ஆனால் இது ஒரு மிக முக்கிய பிரச்சினை. இந்தப் பிரச்சினை இன்று திடீரென்று ஏற்பட்டிருக்கிற பிரச்சினை. நேற்று மாலை வரைக்கும் இல்லாமல் இன்று திடீரென்று ஏற்பட்டு இருக்கிற பிரச்சினை என்ற காரணத்தால் இது பற்றி பேசுவதுதான் முறையாக இருக்கும். அரசு ஊழியர்களுடைய கோரிக்கைகளில் பல கோரிக்கைகள் மிக நியாயமான கோரிக்கைகள். ஏற்கெனவே அனுபவித்துக்கொண்டு இருக்கிற உரிமைகள்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதை ஒத்திவைத்து பேசுவது மாதிரியே பேசக்கூடாது. என்னென்ன பிரச்சினைகள் என்று மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறேன். அதேமாதிரி, இராணி மேரி கல்லூரியைப் பொறுத்தவரையில் அதை நாங்கள் இடிக்கப்போகிறோம் என்று மீண்டும் இடிப்பதற்கு அனுமதி வேண்டும் என்று நீங்கள் கேட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எஸ்.ஆர்.பி. அவர்கள், இந்த ஒத்திவைப்பு பிரச்சினைகள் எல்லாம், காவல் துறை மானியக் கோரிக்கைகள் முடிந்ததற்குப் பிறகு, என்னுடைய அறையில் பேசி, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடியவையா என்று...(குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது வேறு, அதை நான் நேற்று ஒத்துக்கொள்ளவில்லையா? அதற்குள் நிலைமை அத்துமீறி சென்று கொண்டு இருக்கிறது. (குறுக்கீடு) அவசியமாக விவாதிக்க வேண்டும். இந்த இரண்டு பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு அரசின் நிலை என்ன என்பதை தெளிவுபடுத்தினால் ஒழிய இவற்றிற்கு ஒரு விமோசனம் கிடைக்காது. ஆகவே, அரசினுடைய நிலை என்ன என்பதை...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அரசின் தலைமைச் செயலாளர் அவர்களும், நிதிச் செயலாளர் அவர்களும் மற்றும் உயர் அதிகாரிகளும் அரசு ஊழியர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி இருக்கின்றார்கள். நான் இந்த



காவல் துறை மானியக் கோரிக்கையில் முழுமையாக ஈடுபட்டு இருப்பதால் என்னால் அந்தப் பேச்சுவார்த்தைகளின் முழு விவரத்தையும் இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லை. இன்றையதினம் காவல் துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு எனது பதிலுரையை அளித்த பின்னர் நான் தலைமைச் செயலாளருடனும், நிதிச் செயலாளருடனும், இதர உயர் அதிகாரிகளுடனும் கலந்தாலோசனை நடத்த இருக்கிறேன். இன்று பிற்பகல் ஆலோசனை நடந்த பின்னர்தான் அரசின் நிலை என்ன என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க முடியும். ஆகவே இப்போது அவையின் அலுவல்களை இதற்காக ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராணி மேரி கல்லூரி பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்த விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. இன்று மீண்டும் நீதிமன்றத்தில் வாதங்களும், பிரதிவாதங்களும் நடைபெற உள்ளன. ஆகவே, நீதிமன்றம் என்ன கூறுகிறது என்று தெரிந்துகொள்வதற்கு முன்பாக இந்தப் பிரச்சினையைப் பற்றி இந்த அவையில் விவாதிப்பது முறையாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாலை அரசினுடைய தலைமைச் செயலாளருடனும், மற்றவர்களுடனும் நான் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறேன், அதற்குப் பிறகுதான் அரசின் நிலை என்ன என்பதை இறுதியாக முடிவு எடுக்க இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அது உண்மையாக இருக்குமேயானால், அதற்குள்ளாக அரசு ஊழியர்களை அச்சுறுத்த வேண்டிய அவசியம் ஏன் நேரிட்டது? அரசு ஊழியர்களை அச்சுறுத்திக்கொண்டு இருக்கிறீர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு அதை விடுங்கள். அதற்கு மேல் வேண்டாம்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் சொன்னதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இரண்டு பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னீர்கள். பிரச்சினைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இதை விவாதமாக ஆக்குவதற்கு முடியாது. வாய்ப்பு இல்லை. விவாதமாக ஆக்க முடியாது.

[2003 ஏப்ரல் 9

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதற்கு முழுக்க முழுக்க உடன்பாடு இல்லை. முன்பே அந்த நிலையை எடுத்து இருக்கவேண்டும். முன்பே அறிவித்திருக்க வேண்டும். முன்பே எடுத்து அறிவிப்பு செய்திருக்க இருக்க வேண்டும். பல நாட்களாக பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும் முதலமைச்சர் அவர்கள்தான் அதிலே கலந்துகொள்ள வேண்டும் என்று நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். அப்படி நான் சொல்லவும் இல்லை.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லி விட்டீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து நாங்கள் என்ன சொல்ல வருகிறோம் என்பதையாவது கொஞ்சம் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது ஒத்திவைப்புப் பிரச்சினையே இல்லையே! முதலமைச்சர் அவர்கள் நீங்கள் கேட்டதற்கான பதிலைச் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக கடைபிடிக்கப்படும் நடைமுறைதான் இப்போதும் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. எப்போதுமே ஆரம்பத்தில் அரசின் தலைமைச் செயலாளர் அவர்களும், நிதிச் செயலாளர் அவர்களும் அரசு ஊழியர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள். அதன் பின்னர்தான் முதலமைச்சரிடம் வருவார்கள். முதலமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர்தான் இறுதி முடிவு எடுக்கப்படும். அந்தக் கட்டம் இன்றைக்குப் பிற்பகல் நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறேன். அதுவரை திரு. எஸ்.ஆர்.பி. போன்றவர்களுக்குப் பொறுமை இல்லை என்றால் அதற்கு அரசு எதுவும் செய்ய முடியாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பதிலே கொஞ்சம்கூட திருப்தி இல்லாத பதில். (குறுக்கீடுகள்) முதல் கட்டத்திலேயே முதல்வர்தான் பேசவேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினையை முழுமையாக நீங்கள் விவாதித்து...



2003 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு) உங்களுடைய பிரச்சினைக்கு முதலமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே விவாதம் இல்லை. (குறுக்கீடு) அதற்கு மேலே விவாதத்திற்கு இடமில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எழுப்பிய முக்கியமான பிரச்சினை. அரசு ஊழியர்களை ஏன் அச்சுறுத்தினீர்கள் என்பது தான்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதில் விவாதத்திற்கு இடமில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலை தாராளமாகப் பேசட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்னொரு கட்டம் பேச்சுவார்த்தை நடத்துங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அரசு ஊழியர்களை அச்சுறுத்த வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எச்.எம். ராஜு. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எச்.எம். ராஜு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது முக்கியமான பிரச்சினை. கவன ஈர்ப்பை பின்னால் எடுத்துக்கொள்ளலாம். அதற்கு ஒன்றும் அவசரமில்லை. இந்தப் பிரச்சினையை முழுமையாக விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி அளிக்க முடியாது. முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்குமேல் அனுமதி அளிப்பதற்கு முடியாது. உறுதியாக, இறுதியாகத் தெரிவித்துவிட்டேன். பாக்கியை நீங்கள் பேசவேண்டுமென்றால் பேசுங்கள். இல்லையென்றால் அடுத்த நிகழ்ச்சிக்குப் போகலாம்.

[2003 ஏப்ரல் 9

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முதலமைச்சர் அவர்களுடைய பதில் திருப்தியளிக்கவில்லை. இதுதான் பதில் என்று சொன்னால், இதுதான் அரசின் போக்கு என்று சொன்னால் (குறுக்கீடுகள்) Sir, I am making a submission. (Interruption) I am making a submission. இதுதான் அரசாங்கத்தின் முடிவு என்று சொன்னால், இதுதான் அரசாங்கத்தினுடைய இறுதியான முடிவாக இருக்கும், இதிலிருந்து நாங்கள் மாறமாட்டோம் என்று சொன்னால், அரசு ஊழியர்களை அச்சுறுத்துவதுதான் சரி, இராணி மேரி கல்லூரி கட்டடம் இடிக்கப்படுவதுதான் சரி என்பதுதான் அரசினுடைய நிலையாக இருக்குமானால், அதைக் கண்டித்து இன்று அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வது மட்டுமல்ல, அவை நடவடிக்கைகளை முழுமையாக இன்றையதினம் பகிஷ்கரிக்கிறோம். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு இல்லை.

## 2. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். திரு. ஜி.கே. மணி, பேசுங்கள். மணி, மானியக் கோரிக்கை மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்)

### 1. தகவல் கோரல்—தொடர்ச்சி

### அரசு ஊழியர் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனி அனுமதிக்க முடியாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். நேற்று நீங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அநாகரீகமாக நடந்து கொள்கிறார்கள் என்று சொன்னீர்கள். இப்போது ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அநாகரீகமாகத்தான் நடந்து கொள்கிறார்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அதிலே, அரசு ஊழியர்களை அழைத்துப் பேசுவதிலே, மாலை பேசுவதிலே மாறுபட்ட கருத்து இல்லை. அதே நேரத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மானியக் கோரிக்கையா?



2003 ஏப்ரல் 9]

**திரு. ஜி.கே. மணி:** அதே நேரத்திலே ஓர் எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. அது என்னவென்று சொன்னால்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மானியக் கோரிக்கையில்தானே பேசுகிறீர்கள்!

**திரு. ஜி.கே. மணி:** இல்லை. தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை. அரசு ஊழியர்களை முதலமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசுவதிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை. முதலமைச்சர் அவர்கள் தெளிவான கருத்தைச் சொல்லிவிட்டார்கள். இனிமேல் இதில் ஒழுங்குப் பிரச்சினை, ஒத்திவைப்புப் பிரச்சினை எதுவும் கிடையாது.

**திரு. ஜி.கே. மணி:** முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு வந்தால்தான் பேசப்படும் என்ற ஒரு மிரட்டல், எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. அது முறையற்றதாகும். ஆகவே, அவர்களை அழைத்துப் பேசுங்கள். போராட்டத்தைக் கைவிட்டுவிட்டுதான் பேசவேண்டும் என்பது அவசியமில்லை. அதையும் இந்த நேரத்திலே சொல்லி, இங்கே திராவிட முன்னேற்றக் கழகம், சட்டமன்றத்தினுடைய பிரதான எதிர்க்கட்சியினர் இந்த அவையை முழுமையாகப் புறக்கணித்து இருக்கிறார்கள். அவர்களும் ஜனநாயகக் கடமை ஆற்றவேண்டும். ஏற்கெனவே, ஒரு சட்டமன்ற உறுப்பினர்கூட சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மானியக் கோரிக்கையில் பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. தலைவர் அவர்களே, அவர்களை அழைத்துப் பேசுங்கள் என்று சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையில் பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அவர்களை அழைத்துப் பேச வேண்டும் என்று சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஜனநாயகக் கடமை ஆற்றுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point of order. (குறுக்கீடு).

[2003 ஏப்ரல் 9

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள் மேற்கு வங்க அரசை ஒரு மோசடி செய்து ஆட்சிக்கு வந்திருக்கிறது என்று, இன்னொரு மாநிலத்தைப் பார்த்து, இன்னொரு ஆட்சியைப் பார்த்துச் சொல்லியிருப்பது ஒரு கண்டனத்திற்குரிய விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. முதலைச்சர் சொன்னார்கள். அதற்கு ஹேமச்சந்திரன் பதில் சொன்னார். (குறுக்கீடுகள்) முதலமைச்சர் சொன்னார்கள், ஹேமச்சந்திரன் பதில் சொன்னார். (குறுக்கீடுகள்) ஹேமச்சந்திரன் சொன்ன பதிலும் அவைக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு ஹேமச்சந்திரன் சொன்ன பதில் அவைக் குறிப்பிலே இருக்கிறது. அதனால் அதற்குரிய விளக்கம் அதிலேயே முடிந்து விடுகிறது. இனிமேல் இதில் புதுப் பிரச்சினை ஒன்றும் கிடையாது. திரு. ஜி.கே. மணி, மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.

முற்பகல் 10-10

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விதி 92-ன் படி மற்ற மாநில சட்டமன்றத்தைப்பற்றி ஆதாரம் இல்லாமல் அவதூறாகப் பேசுவது சரியல்ல. எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு (குறுக்கீடு) என்னை பேசவிடுங்கள். (குறுக்கீடு) நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், ஒரு மாநில அரசு-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நேற்றே இதற்கு முதலமைச்சர் பேசி, நீங்களும் பதில் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) நேற்றே இதற்கு நீங்கள் பதில் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) நேற்றே முடிந்துவிட்ட பிரச்சினை. இன்றைக்கு எதற்காக மறுபடியும் அதைப்பற்றி பேசுகிறீர்கள்?

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு தவறான குற்றச்சாட்டை இங்கே கூறிக்கொண்டு இருக்கிறார். நேற்றையதினம் பேசுகிறபோது இன்னொரு மாநிலத்தின் சட்டமன்றத்தைப் பற்றி நான் எவ்வித கருத்தும் கூறவில்லை. அவர்களுடைய கட்சியைப் பற்றிக் கூறினேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் நேற்றே சூடாக பதில் தந்துவிட்டார். அதோடு பிரச்சினை முடிந்தது.



2003 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நேற்றே முடிந்துவிட்ட பிரச்சினை, நேற்றே ஹேமச்சந்திரன் இதற்குப் பதில் சொல்லிவிட்டார். நேற்றே முடிந்துவிட்டது. (குறுக்கீடு) நேற்றே முடிந்துவிட்ட பிரச்சினை. திரு. ஜி.கே. மணி பேசுங்கள். மானியக் கோரிக்கையில் நீங்கள் பேசலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு சட்டமன்றமே விதிகளின்கீழ் உருவாக்கப்பட்டிருப்பது என்பதுதானே-

**திரு. ஜி. பழனிசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடு) நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கு வங்கத்து சட்டமன்றத்தைப்பற்றி எதுவும் கூறவில்லை. அரசியல்ரீதியான நடவடிக்கைகளைப் பற்றிக் கூறினார்கள். மாண்புமிகு திரு. ஹேமச்சந்திரன் அவர்களும் எங்களைப் பற்றியும், எங்கள் கட்சியினுடைய அரசியலமைப்பு பற்றியும் குறை சொன்னார்கள். இரண்டும் பதிவேட்டில் இருக்கின்றன. எனவே மேற்கு வங்க அரசினுடைய சட்டமன்றத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு, இதோடு இதனை முடித்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, மானியக் கோரிக்கையில் பேசுங்கள். (குறுக்கீடுகள்).

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.)

திரு. பழனிசாமி, என்ன நீங்கள் வீணான வம்பை வளர்க்கிறீர்கள்? நேற்றையதினம் திரு. ஹேமச்சந்திரனும் பேசினார். திரு ஹேமச்சந்திரன் அவர்கள், தேர்தல் கமிஷன் முதலமைச்சரைப் பற்றி சொல்லியிருக்கிறது என்று பேசினார்கள். அவர் பேசியதற்கு, முதலமைச்சர் பேசி, அதற்கு திரு. ஹேமச்சந்திரன் பதிலும் சொல்லிவிட்டார். இரண்டும் அவைக் குறிப்பிலே இருக்கின்றன. நேற்றோடு பிரச்சினை முடிந்துவிட்டது. நேற்று முடிந்துவிட்ட பிரச்சினையை இப்போது எதற்காக கிளப்புகிறீர்கள்? (குறுக்கீடு) முடிந்துவிட்ட பிரச்சினை. திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2003 ஏப்ரல் 9

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி பொதுவான ஒரு கருத்தைச் சொன்னேன். ஆனால் அதற்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் தனிப்பட்ட முறையில் என்னைக் குறிப்பிட்டு என் மீதே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதுவும் அவைக் குறிப்பில் இருக்கிறது. ஆகவே மேலும் இந்தப் பிரச்சினையை வளர்ப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, மானியக் கோரிக்கையில் பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஜி.கே. மணி, மானியக் கோரிக்கையில் பேசுங்கள். இல்லாவிட்டால், அடுத்த உறுப்பினரை கூப்பிட வேண்டியதிருக்கும். (குறுக்கீடு) பிரச்சினை முடிந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பேசினால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினால், ஆளும் கட்சி உறுப்பினர்களைப் பேசக் கூடாது என்பதா? அவர்களை முதலில் அடக்கிவையுங்கள்.

**திரு. ஹேமச்சந்திரன்:** நீங்கள் தாராளமாகப் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜி.கே. மணி, நீங்கள் பேசுங்கள். திரு. ஹேமச்சந்திரன், திரு. பழனிசாமி முதலிலே நீங்கள் அவையினுடைய விதியை மதிப்பதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். பழனிசாமி பேரவைத் தலைவரை நோக்கிப் பேசுங்கள். திரு. ஜி.கே. மணி நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மணி, பேச ஆரம்பியுங்கள்.

*(திரு. ஜி. பழனிசாமி நின்று பேசிக் கொண்டிருந்தார்.)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டு (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நியாயமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு சந்தர்ப்பம் தாராமல் இருக்கிற நிலையைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவைக்குள் கோஷமிட்டுக்கொண்டு இருந்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.



2003 ஏப்ரல் 9]

## 2. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டின் காவல் துறை மானியக் கோரிக்கையில்....

*(இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் உள்ளே கோஷம் போட்டுக்கொண்டு இருந்தனர்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது. கோஷம் போடுவதாக இருந்தால், வெளிநடப்புச் செய்வதாகச் சொல்லிவிட்டதால் தயவுசெய்து சட்டமன்ற வளாகத்திற்கு வெளியேபோய் கோஷம் போடுங்கள். மணி, நீங்கள் பேசுங்கள் .

*(இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து உள்ளே கோஷம் போட்டுக் கொண்டிருந்தனர்)*

**திரு. ஜி.கே. மணி:** பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்ளே கோஷம் போடக்கூடாது. எச்சரிக்கிறேன். தயவு செய்து வெளியே போங்கள். வெளிநடப்புச் செய்வதாகச் சொல்லிவிட்டீர்கள். வெளியேறுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:**

**"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"**

என்று திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார்.

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்து, தானும் வருத்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல்–

*(இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பிக்கொண்டிருந்தனர்.)*

முற்பகல் *10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, இது தெருமுனையல்ல, சந்துமுனையல்ல.

**திரு. ஜி.கே. மணி:** தெளிவாக இங்கே குறிப்பிட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புச் செய்துவிடுகிறோம் என்று நீங்கள் அறிவித்துவிட்டு, கோஷம் போட்டுக் கொண்டிருப்பது முறையல்ல. தயவு செய்து வெளியே போங்கள்.

*(இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)*

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் வெளியேறினர்.)*

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, அந்த அடிப்படையிலே நம்முடைய ஜனநாயகத்தினுடைய மிகப்பெரிய அங்கமாக இருப்பது காவல் துறை. இந்தக் காவல் துறை மாநிலத்தினுடைய பாதுகாப்பு அரணாக, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கக்கூடிய அமைப்பாக, குறிப்பாக மனிதனுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் பாதுகாக்கக்கூடியதாக, மனிதநேயத்தை நிலைநிறுத்தக்கூடியதாக, மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஓர் அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்த அடிப்படையிலே காவல் துறையினுடைய மதிப்பு தமிழகத்திலே உயர வேண்டுமென்று சொன்னால், இது ஓர் autonomous body என்று சொல்லக்கூடிய சுதந்திர அமைப்பாகச் செயல்படவேண்டும். அப்போதுதான் இதனுடைய மதிப்பு உயரும் என்ற கருத்தின் அடிப்படையிலே, இங்கு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே காவல் துறை சிறப்புப் பெறவேண்டுமென்று சொன்னால், இங்கே ஒரு மாநில பாதுகாப்பு கமிஷன் உருவாக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதாவது State Security Commission...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள், உறுப்பினர்கள் சட்டமன்ற லாபியிலே இருந்து முழக்கம் இடுவதற்கு அனுமதிக்காதீர்கள். தயவுசெய்து வெளியே அனுப்புங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதாவது, State Security Commission என்று சொல்லக்கூடிய மாநில பாதுகாப்பு ஆணையம் ஒன்று துவக்கப்படவேண்டும். அந்தப் பாதுகாப்பு ஆணையத்தினுடைய தலைவராக உள் துறை அமைச்சர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைவராக இருக்கலாம். அந்த அடிப்படையிலே ஆளும் கட்சியிலே ஒரு சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சி வரிசையிலே கட்சிக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர், அதைப்போலவே நீதிபதிகள், அரசாங்க அதிகாரிகள் அல்லது சமூகவியல் அறிஞர்கள்,



கல்வியாளர்கள் போன்றவர்களில் நான்கு நபர்களை அந்தக் குழுவிலே நியமித்து—இதிலே ஒரு மூத்த காவல் துறையினுடைய அதிகாரியையே செயலாளராக நியமிக்கலாம்—ஓர் அமைப்பை உருவாக்கி, தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்பாகச் செயல்பட வழிவகுக்க வேண்டும். ஆனால், இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையிலே காவல் துறை என்று சொன்னாலே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கடந்த காலத்திலே அது திராவிட முன்னேற்றக் கழகக் காவல் துறை, டாக்டர் கலைஞருடைய காவல் துறை. இப்போது பார்த்தால் அதிமுக., நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காவல் துறை என்று சொல்லக்கூடிய அளவிற்கு, மக்கள் எல்லாம் இன்று பேசத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும் என்பதற்காகத்தான் இங்கு நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, காவல் துறை எண்ணிக்கையை மக்கள் தொகைக்கு ஏற்ப, பரப்பளவின் அடிப்படையிலே நாம் திருத்தியமைக்கவேண்டும். தமிழகத்திலே இன்று 100 சதுர கிலோமீட்டருக்கு 6100 காவலர்கள் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், பஞ்சாபை பொறுத்தவரையிலே, 139.6-க்குக் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே, இன்னும் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 175 காவலர்கள் இருப்பது பொருத்தம் உடையதாக இருக்கும் என்று கணக்கெடுப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தவகையிலே தமிழகத்திற்கு 35 ஆயிரம் காவல் பணியாளர்கள் நியமனம் செய்யப்படவேண்டியதிருக்கிறது. அந்த அடிப்படையிலே தேசிய காவல் துறை கமிஷன் சிபாரிசு ஒன்று செய்திருக்கிறது. எந்த வகையிலே என்று சொன்னால், காவலர்கள், காவல் பணியாளர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் ஆகியோர் 45 சதவீதம் இருக்கவேண்டும். துணை ஆய்வாளர்கள் மற்றும் உதவித் துணை ஆய்வாளர்கள் 32 சதவீதம் இருக்க வேண்டும். அதைப்போலவே ஆய்வாளர்கள் 18 சதவீதம் இருக்கவேண்டும். கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் 5 சதவீதம் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே இந்த அடிப்படையிலே காவல் துறையினுடைய எண்ணிக்கை இருக்கும் என்று சொன்னால், அது சிறப்புடையதாக இருக்கும் என்று இங்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், காவல் துறையைப் பொறுத்தவரையிலே 1861-லே அன்று இருந்த ஆங்கிலேயர்களாலே கொண்டுவரப்பட்டது. அப்போது கொண்டுவரப்பட்ட சட்டம், போலீஸ் சட்டம், அதாவது காவல் துறைச் சட்டம் என்று சொல்லப்படுகிறது. அந்தக் காவல் துறைச்

சட்டத்திலே இன்றைய வளருகின்ற நிலைமைகளுக்கேற்ப மாறுதல்களுக்கேற்ப, தேவைகளுக்கேற்ப, சட்டங்கள் இங்கே திருத்தியமைக்கப்படவில்லை. வெள்ளைக்காரர்கள் காலத்திலே இருந்த நடைமுறையே இன்றும் பெரும்பாலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அடிப்படையிலே காவல் துறையிலே இன்னும் நிறைய சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். சீர்திருத்தங்கள் என்று சொல்கிறபோது, இப்போதுகூட நவீன ஆயுதங்களை வாங்குவதற்காக, இன்னும் புனரமைப்பு செய்வதற்காக கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தாலும்கூட, காவல் துறையினரிடையே மிகப்பெரிய ஏமாற்றமும் ஏக்கமும் ஏற்பட்டிருக்கிறது. இங்கே நவீனமயமாக்கப்படுவதைத் தவிர எங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு ஆதாயம் ஒன்றும் இல்லை என்று அவர்கள் எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதையும் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

அதைப்போல, காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக 2002-2003-லே திருத்திய மதிப்பீட்டிலே ரூ. 21.44 கோடி. ஆனால் 2003-2004-லே திட்ட மதிப்பீட்டிலே ரூ. 12.85 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்வதனாலே எந்த வகையிலே நவீனமயமாக்கப்படும்? அப்படிப் பார்க்கிறபோது இங்கே பயிற்சி, இவர்களுக்குப் புகட்டக்கூடிய கல்வி எல்லாம் குறைக்கப்பட்டுவிடுமா என்ற சந்தேகம் எங்களுக்குத் தோன்றுகிறது.

அதேமாதிரி 2002-2003 திட்ட மதிப்பீட்டிலே ரூ. 105 கோடி. திருத்திய மதிப்பீட்டிலே ரூ. 98 கோடி. இப்போது 2003-2004-லே திட்ட மதிப்பீட்டிலே ரூ. 83 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படிக் குறைக்கப்பட்டது என்று சொன்னால், காவல் துறை எப்படி நவீனமயமாக்கப்படும்? இந்தப் பயிற்சிகள் எல்லாம் எப்படி வழங்கப்படும்? நிதி குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, இங்கே சீருடைப் பணியாளர் தேர்வாணையம் இருக்கிறது. இதற்கு 2001-2002 கணக்கிலே ரூ. 66 இலட்சம். 2002-2003 திருத்திய மதிப்பீட்டிலே ரூ. 116 இலட்சம். 1 கோடியே 16 இலட்சம். 2003-2004-லே ரூ.74 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.



இவ்வளவு குறைவு என்று சொன்னால் 12 ஆயிரம் காவலர் தேர்வுப் பணி, அதைப்போலவே, இன்னும் தேர்வுகள் எல்லாம் நடைபெறவிருக்கின்றன. பயிற்சி வழங்கப்படுவதாகச் சொல்கிறீர்களே, இந்தப் பணி நடக்குமா என்ற கேள்வி இங்கே எழுகிறது. ஆகவே, இதற்கு எந்த அளவு நிதியைக் கூடுதலாக்கப் போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல, இன்னும் ஒன்று. மிக முக்கியமான பிரச்சினை. இன்று ஒப்பளிக்கப்பட்ட I.P.S. பணியிடங்கள் 214. ஆனால் 28-2-2003-ன்படி தமிழ்நாட்டினுடைய I.P.S. அதிகாரிகள் 170 பேர். அப்போது, மீதி 44 I.P.S. பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இது நீண்ட காலமாக நிலுவையிலே இருக்கிறது. இவற்றை எப்போது நிரப்பப் போகிறீர்கள்? இப்படிக் காலி இடங்கள் இருந்தால் காவல் பணி எப்படிச் சிறப்பாக இருக்கும்? ஆகவே, இந்தக் காலிப் பணியிடங்களை எப்போது நிரப்பப் போகிறீர்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, காவலர்கள் குடியிருப்பு. காவலர்கள் மொத்தம் 95,007 பேர். இதில் 57,573 பேருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்போது, 3 ஆயிரம் வீடுகள் என்று சொல்லி இருக்கிறீர்கள். 3 ஆயிரம் வீடுகள் என்று சொன்னாலும்கூட 20 ஆண்டுகள் ஆகும், இப்போதைய காவலர்களின் எண்ணிக்கைக்கேற்ப. 20 ஆண்டுகளில் இன்னும் கூடுதலாக எண்ணிக்கை சேரும் என்று சொன்னால், அப்போது குடியிருப்பு வசதியே இல்லாமல் போய்விடும். ஆகவே இதை எப்படிக் கூடுதலாக்கப் போகிறீர்கள் என்பதை இங்கே கேட்க விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய மொத்தக் காவல் நிலையங்கள் 1365. அதிலே 957 காவல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மீதி 408 காவல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. அவற்றை கட்டி முடிக்க வேண்டும்.

அதைப்போல என்னுடைய தொகுதியிலே இண்டூர், பெரும்பாளை ஆகிய காவல் நிலையங்கள் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. அவற்றிற்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். காவலர்கள் குடியிருப்புகளும் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நேற்றுகூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே 641 ஆண் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் பணித் தேர்வு செய்யப்படுவது தீவிரமாகப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். பரிசீலிப்பது என்றால் இந்த ஆண்டிலேயா? எவ்வளவு காலம் கடக்கும்? பெண் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். ஏறக்குறைய 12,330 பேர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவை இந்த ஆண்டிலே நிறைவேற்றப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல, விசாரணை கமிஷன். நம்முடைய மாநகராட்சி மன்றத்திலே கலாட்டா நடந்தது என்று சொல்லி அதை விசாரிப்பதற்காக நடராஜன் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. அது 3 மாத காலம் என்று சொல்லி இப்போது 3 முறை 3 மாதம், 3 மாதம் என்று தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. இப்படித் தள்ளிப் போட்டுக்கொண்டே போனால் அதற்கு வரையறை வேண்டாமா? சிக்கன நடவடிக்கை என்று சொல்கிற நேரத்திலே கூடுதல் செலவாகாதா? இது ஒரு கமிஷனுடைய கேள்வி.

இரண்டாவதாக மதுரை அருகிலே இருக்கக்கூடிய மேலூர் அரசு கலைக் கல்லூரி மாணவ, மாணவிகளுடைய பிரச்சினை. அதை ஆய்வு செய்வதற்காக, விசாரிப்பதற்காக சுப்ரமணியம் தலைமையிலே ஒரு கமிஷன். அதுவும் ஓராண்டிற்கு மேலாகி இப்போது 4 மாதம் நீட்டிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல நமது சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியிலே பிரச்சினை என்று சொல்லி எ. பக்தவத்சலம் தலைமையிலே ஒரு விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 2 ஆண்டுகள் ஆகப்போகிறது. அதற்கும் கால நீட்டிப்பு. இப்படி இந்த கமிஷன்களுக்கெல்லாம் கால நீட்டிப்பு என்று சொன்னால் இது முறையான செயலாக இருக்காது. நிதி நெருக்கடி உள்ள நிலையில் மேலும் கூடுதலான செலவை உண்டாக்கும். ஆகவே...

முற்பகல் 10-25

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி பிரச்சினையை விசாரிப்பதற்காக முதலில் ஜஸ்டீஸ் அலி முகமது அவர்கள் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. பின்னர் அவர் இயற்கை எய்திவிட்டார்,



காலமாகிவிட்டார். அதனால் அந்த விசாரணை கமிஷன் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி பக்தவத்சலம் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் காலதாமதம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. ஒரு கமிஷனுக்கு கால அவகாசம் மூன்று மாதம் என்று சொல்லப்படுகிறது. இதை மூன்று மாத காலத்திற்குள்ளேகூட விசாரிக்க முடியவில்லை என்று சொன்னால், அவர்களுடைய பணி எந்தத் தன்மையிலே இருக்கும், எந்த அடிப்படையிலே இருக்கும்? ஆகவே, சிக்கன நடவடிக்கையைக் கருதி விரைவாக முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே நிறைய D.G.P. பதவிகள். யாருக்கும் வாய்ப்பு கொடுப்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. இருந்தாலுங்கூட தலைமைச் செயலாளர், உள் துறை செயலாளர் என்று பதவி இருப்பதைப்போல அந்தத் துறைக்கு ஓர் இயக்குநர் இருப்பது பொருத்தமாக இருக்கும். அப்படி ஒருவர் என்று சொல்கின்ற நேரத்திலே மற்றவர்களுக்கெல்லாம் பதவி ஓய்வுபெறுகின்ற காலங்களிலே குறைந்தது இரண்டு மாதங்கள், ஐந்து மாதங்கள் இருந்தாலுங்கூட எல்லோருக்கும் வாய்ப்பு வருவதற்கு கால அவகாசம் இருக்கும். அந்த அடிப்படையிலே ஒருவரையே வைத்துக்கொள்வது பொருத்தமாக இருக்குமென்று நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமானது. எல்லாக் காவல் நிலையங்களிலும் ஒரு விளம்பரப் பலகை வைக்கப்பட்டிருக்கிறது. அது டி.கே. பாஸ் வழக்கிலே உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த 11 கட்டளைகள் எந்தக் காவல் நிலையத்திலும் முழுமையாகப் பின்பற்றப்படுவதில்லை. அது மனித உரிமையைப் பாதுகாக்கக்கூடிய ஒரு நல்ல அங்கமாக இருக்கிற காரணத்தினால் அதைப் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த முக்கியமான பிரச்சினை. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு அச்சுறுத்தல் கூடாது என்பதிலே மாறுபட்ட கருத்தில்லை. அதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே இந்த

எஸ்.சி.,எஸ்.டி. வன்கொடுமைச் சட்டம், எஸ்.சி.,எஸ்.டி.-யிலே இருக்கக்கூடிய இந்த P.C.R. Act என்பது, தமிழகம் முழுவதும் தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற குற்றச்சாட்டு மேலோங்கி இருக்கிறது. இது எல்லோர் மத்தியிலும் இருக்கக்கூடிய பிரச்சினை. ஆகவே, இதைத் தீவிரமாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத்தான் நான் வற்புறுத்துகிறேன். அந்த அடிப்படையிலே அங்கே காவல் துறை அதிகாரிகள், அந்தக் காவல் நிலையத்திற்குள்ளே இருக்கக்கூடிய ஒரு பிற்படுத்தப்பட்டவர், ஒரு தாழ்த்தப்பட்டவர், ஒரு பத்திரிகையாளர், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த இவர்களையெல்லாம் உள்ளடக்கி ஒரு குழு அமைத்து அந்தப் புகாரிலே தவறு இருக்குமென்று சொன்னால், குற்றம் இருக்குமென்று சொன்னால், அதை நிலைநிறுத்துவதிலே, வழக்குப் பதிவு செய்வதிலே, தண்டனை வழங்குவதிலே மாறுபட்ட கருத்தில்லை. இது தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதற்கு ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே கடந்த 10 ஆண்டு காலத்திலே இந்த எஸ்.சி.,எஸ்.டி வன்கொடுமை தடுப்புச் சட்டத்திலே பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 7362. இதில் காவல் நிலையங்களிலே தள்ளுபடி செய்யப்பட்டவை, நிராகரிக்கப்பட்டவை 3416. அதாவது 46.4 சதவீதம். குற்றம் நிரூபிக்கப்பட்டவை 2106, அதாவது 28.6 சதவீதம். குற்றம் நிரூபிக்கப்படாதவை 177, நிலுவையில் உள்ளவை 1223, 22.6 சதவீதம். ஆக, 100 வழக்குகளுக்கு 2 வழக்குகள் மட்டுமே நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இது எவ்வளவு பெரிய மோசடி வழக்கு என்பது இங்கே நமக்கு நிரூபணமாகிறது. அதைப் போலவே, P.C.R. Act பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 3152. காவல் நிலையத்திலே தள்ளுபடி செய்யப்பட்டவை, நிராகரிக்கப்பட்டவை 1248. அதாவது 39.6 சதவீதம். நிரூபிக்கப்படாதவை 1645, 52.2 சதவீதம். குற்றம் நிரூபிக்கப்பட்டவை 122 வழக்குகள். 5.17 சதவீதம். நிலுவையில் உள்ள வழக்குகள் 97, 3.17 சதவீதம். ஆக, இதிலேயும் எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், ஏறக்குறைய 5 வழக்குகள் மட்டுமே நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவேதான் இந்தச் சட்டத்தினாலே பரவலாக எல்லா சமுதாய மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இதிலே நம்முடைய அரசு அக்கறை செலுத்துமா என்பதை இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பொடா சட்டம். இந்தச் சட்டம் தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகப் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. 42



பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கு, தவறு என்பதற்குக் காரணம், இரண்டு 15 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இளைஞர்கள் என்று சொன்னால் அவர்களுக்குச் சட்டம் இருக்கிறது. J.J. Act என்று சொல்கிறார்களே, அந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கலாம். பொடா சட்டம் தேவையில்லை. அதாவது Juvenile Justice Act-லே கைது செய்யப்பட்டிருப்பார்கள். என்று சொன்னால், இங்கே பொடா சட்டம் தவறுதலாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதைச் சொல்ல முடியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இரண்டு பேருக்கு வயது 15 அல்ல. 18 வயதாகிறது. தருமபுரி மாவட்டம், காவல் துறையில் நக்சலைட் சிறப்புப் பணிப் பிரிவின் காவல் துறை ஆய்வாளர், 23-11-2002 அன்று சாலைஜோகிப்பட்டி கிராமத்திலுள்ள மாந்தோப்பில் சோதனை நடத்தினார். அதன் தொடர் நடவடிக்கையாக 24-11-2002 அன்று நடத்தப்பட்ட சோதனையின்போது ஊத்தங்கரையில் உள்ள குருசாமி என்பவரது குடிசை வீட்டிலிருந்து ஆயுதங்கள், வெடி பொருட்கள் மற்றும் மக்கள் யுத்தக் குழு தொடர்பான புத்தகங்கள் போன்றவற்றைக் கைப்பற்றினார். இதுசம்பந்தமாக பிரபாகரன் உட்பட, அதாவது தந்தை பெயர் குருசாமி, பிரபாகரன் உட்பட மூன்று எதிரிகள் கைது செய்யப்பட்டு 25-11-2002 அன்று நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். 2-12-2002 அன்று இவ்வழக்கு மேல் விசாரணைக்காக 'கியூ' பிரிவிற்கு மாற்றப்பட்டு, பிரபாகரன் உட்பட மூன்று எதிரிகளும் விசாரணைக்காக காவல் துறை பாதுகாப்பில் எடுக்கப்பட்டனர். இதற்கு முன்னர், மும்முறை நீதிமன்றக் காவலுக்காக ஆஜர்படுத்தப்பட்டபோது, பிரபாகரன் தனது உண்மையான வயதை வெளிப்படுத்தவில்லை. 10-1-2003 அன்று மேற்கண்ட வழக்கில் 'பொடா' சட்டப் பிரிவுகளைச் சேர்த்து அது தொடர்பான ஒரு அறிக்கை ஊத்தங்கரை நீதித் துறை நடுவருக்கு அனுப்பப்பட்டது.*

*முற்பகல் 10-30*

*சென்னை பூந்தமல்லியிலுள்ள 'பொடா' வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு மாற்றப்படும்போது, 14-1-2003 அன்று,*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஏப்ரல் 9

கிருஷ்ணகிரியிலுள்ள தர்மபுரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நடுவர் முன்பாக பிரபாகரனின் வழக்கறிஞர் சமர்ப்பித்த மனு ஒன்றில் தனது கட்சிக்காரர் பிரபாகரன் இளம் குற்றவாளி எனக் கூறியிருந்தார். Radiology பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில், பிரபாகரன் 18 வயதிற்கும், 19 வயதிற்கும் இடையில் உள்ளவர் எனக் கண்டறியப்பட்டது. இருப்பினும், கிருஷ்ணகிரியில் உள்ள முதன்மை அமர்வு நீதிமன்ற நடுவர் அவர்கள், எதிரி பிரபாகரனைப் பிணையில் விடுவித்து, அவரது தாயாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று 24-1-2003 அன்று உத்தரவிட்டார்.

பின்னர், 7-2-2003 அன்று கிருஷ்ணகிரி முதன்மை அமர்வு நீதிமன்ற நடுவர் அவர்கள் எதிரியை அவரது தாயின் சகோதரியான நாகம்மாள் என்பவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்.

14-1-2003-க்கு முன்பாக, பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும், தான் ஒரு இளம் குற்றவாளி என்பதனை பிரபாகரனோ அல்லது அவரது வழக்குரைஞரோ, உள்ளூர் காவல் நிலையத்திலோ அல்லது நீதித் துறை நடுவருக்கோ அல்லது 'கியூ' பிரிவுப் போலீசாருக்கோ தெரிவிக்கவில்லை.

10-2-2003 அன்று அரசுத் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனு ஒன்றில் பிரபாகரனுக்கு அளித்த பிணையை இரத்து செய்ய வேண்டும் என்று சென்னை, பூந்தமல்லியிலுள்ள 'பொடா' வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் கோரப்பட்டது. மனுவைப் பரிசிலித்த பின்னர், பிரபாகரனை, சென்னை புரசைவாக்கத்தில் உள்ள கூர்நோக்கு இல்லத்தில் வைக்க வேண்டும் என்று நீதிமன்ற நடுவர் உத்தரவிட்டார். எதிர்த் தரப்பு சார்பாக 13-2-2003 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 4511/2003 தாக்கல் செய்யப்பட்டு, பிரபாகரனை பிணையில் விடுவிக்கக் கூடாது என்ற மனு மீதான விசாரணையை நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னை உயர் நீதிமன்றம் 18-3-2003 அன்று, தனது உத்தரவில் கிருஷ்ணகிரி முதன்மை அமர்வு நீதிமன்ற நடுவர் உத்தரவை உறுதிப்படுத்தியதுடன், எதிரி பிரபாகரனை சிறார்களுக்கான பாதுகாப்புச் சட்டம் 2000-ன் கீழ் விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இதன்படி சென்னை, பூந்தமல்லியிலுள்ள 'பொடா' சிறப்பு நீதிமன்ற நடுவர் 18-3-2003 அன்று பிரபாகரனை பிணையில் விடுவிக்க வேண்டும் என்று



2003 ஏப்ரல் 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உத்தரவிட்டதையடுத்து, 19-3-2003 அன்று சென்னை, புரசைவாக்கத்தில் உள்ள கூர்நோக்கு இல்லத்தில் இருந்து பிரபாகரன் விடுவிக்கப்பட்டார். அரசு தரப்பில் இது தொடர்பாக எவ்வித மேல்முறையீடும் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

24-11-2002 அன்று ஊத்தங்கரை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளான தீப்பம்பட்டி மற்றும் ஒன்னக்கரை வனப் பகுதிகளில் தேடுதல் பணியினை காவல் துறையினர் மேற்கொண்டனர். நான்கு பெண்கள் உட்பட, 15 நக்சலைட்டுகள், காவல் துறையினரின் உயிருக்கு ஊறு விளைவிக்கும் வகையில் அவர்களை நோக்கி இரண்டு சுற்று துப்பாக்கிச் சூடு நடத்தினர். இருப்பினும், காவல் துறையினர் அவர்களைச் சுற்றி வளைத்தனர். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 15 நக்சலைட்டுகளில் ஒருவரான ஆனந்தகுமார் என்கிற பகத்சிங் 24-11-2002 அன்று கைது செய்யப்பட்டார். மூன்று நாட்டுத் துப்பாக்கிகள், இரண்டு பயன்படுத்தப்படாத தோட்டாக்கள் மற்றும் இரண்டு காலி தோட்டாக்கள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. ஆனந்தகுமார் என்கிற பகத்சிங் காவல் துறை பாதுகாப்பில் எடுக்கப்பட்டு, அவரது ஒப்புதல் வாக்குமூலத்தின்படி 17-12-2002 அன்று சாமல்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய குடியிருப்பிற்குப் பின்னால் உள்ள ஒரு புதரில், பைப் வடிவ வெடிகுண்டு ஒன்று பறிமுதல் செய்யப்பட்டது. ஊத்தங்கரை காவல் நிலையத்தின் 4 வழக்குகளில் சம்மந்தப்பட்ட 26 எதிரிகளும் 20-2-2003 அன்று சென்னை, பூந்தமல்லியில் உள்ள பொடா வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். ஆனந்தகுமார் என்கிற பகத்சிங்கின் வழக்கறிஞர், தனது கட்சிக்காரர் இளம் குற்றவாளியாகக் கருதப்பட வேண்டியவர் என்று கூறுவதால் ஆனந்தகுமாரை சென்னை புரசைவாக்கத்தில் உள்ள கூர்நோக்கு இல்லத்தில் வைக்கவேண்டும் என்று தனி நீதிமன்ற நடுவர் உத்தரவிட்டார். ஆனந்தகுமாரின் வழக்கறிஞர், பூந்தமல்லியில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் 20-2-2003 அன்று மனு ஒன்றை தாக்கல் செய்து, தனது கட்சிக்காரர் சம்பந்தப்பட்ட அனைத்துக் கோப்புகளையும் சிறார்களுக்கான நீதித் துறை சட்டம் 2000, பிரிவு 7 உட்பிரிவு 1-ன்கீழ் சேலம் சிறார் குற்றவாளிகளுக்கான நீதிமன்ற வாரியத்திற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். Radiology பரிசோதனை செய்த சென்னை மருத்துவக் கல்லூரியின் தடய அறிவியல் பிரிவு உதவிப்

பேராசிரியர் டாக்டர் ஆர். செல்வகுமார், சிறப்புச் சான்றிதழ் வழங்கிய திருப்பத்தூர் நகராட்சியின் ஊழியர்களான ஜி. விஸ்வநாதன் மற்றும் பத்மராஜ் ஆகியோரை 25-3-2003 அன்று விசாரித்த பூந்தமல்லி சிறப்பு நீதிமன்ற நடுவர், ஆனந்தகுமார் என்கின்ற பகத்சிங் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் தொடர் விசாரணைக்காக சேலம் சிறார் குற்றவாளிகளுக்கான நீதிமன்ற வாரியத்திடம் சட்டப்படி பாதுகாப்பாக ஒப்படைக்கவேண்டும் என்று புரசைவாக்கத்தில் உள்ள கூர்நோக்கு இல்லத்தின் கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டார். அதன்படி 28-3-2003 அன்று ஆனந்தகுமார் என்கிற பகத்சிங் சேலத்தில் உள்ள கூர்நோக்கு இல்லத்திற்கு மாற்றப்பட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கினார்கள். இந்த விளக்கத்திலே நான் சொல்ல விரும்புவது பொடா சட்டத்திலே கைது செய்யப்பட்டு சிறப்பு நீதிமன்றத்திலே இவர்கள் கைது செய்தது முறையானது அல்ல என்று தீர்ப்பு வழங்கி கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பப்பட்டதிலிருந்தே அந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்று நான் சொல்கிறேன். அதைப்போலத்தான்..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போதுதான் தெளிவாக விளக்கினேன். அந்த இருவரும் வாட்டசாட்டமாக இருக்கிறார்கள். 18 வயது நிரம்பியவர்கள். அவர்கள் சிறுவர்கள் என்று யாரும் கருதவில்லை. அவர்கள் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் இளம் குற்றவாளிகள் என்று எந்தக் கட்டத்திலும் தெரிவிக்கவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான பிரச்சினை. ராஜாராம் என்பவர் காவல் துறையினராலே காவலிலே சுட்டுக் கொல்லப்பட்டது என்பது தெரிந்த விஷயம். அவரைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது, அவர் மிக பயங்கர தீவிரவாதி என்றெல்லாம் காவல் துறையே சொல்லி இருக்கிறது. அவர் மீது பல்வேறு வழக்குகள் இருக்கின்றன. அவர் சாதாரண குற்றவாளி அல்ல, பல கொலைகளைச் செய்தவர். திட்டக்குடியிலே முருகன் என்பவரை எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவரைக்கூட கொலை செய்தவர். ஆதனூரிலே, பெரம்பலூர் மாவட்டத்திலே ஓர் ஆசிரியரைக்



கொலை செய்தவர். பல்வேறு கொலை வழக்குகள் எல்லாம் இருக்கின்றன. அதற்கு காவல் துறையில் அவருக்கு பின்னணி இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அவருக்கு பின்னணியாக இருக்கக்கூடியவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கமுடியும், ஒரு வன்முறைக் கும்பலுடைய தலைவர், ஆகவே அவருக்கு பல்வேறு பின்னணி இருக்கிறது என்கின்ற காரணத்தினாலேதான், இங்கே சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளிலும் கொலை, கொள்ளை, கடத்தல், திருட்டு எல்லாம் நடந்திருக்கின்றன. கடலூர் மாவட்டத்திலே ஜாதிக் கலவரம் நடப்பதற்கு, திருட்டு, கொலைகளுக்கு எல்லாம் அவர் காரணமானவர். அதுமட்டுமல்ல அவர் அந்த மாவட்டத்திலே பைப் வெடிகுண்டு என்ற ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்கியவர். கிராமங்களிலே இளைஞர்களுக்கு அந்த பைப் வெடிகுண்டுகளை தயாரிக்க கற்றுக் கொடுத்தவர். ஆக இவருக்குப் பின்னாலே இருக்கக்கூடிய சக்தி என்று காவல் துறை சொல்கிறதே, அதை எப்பொழுது நீங்கள் கண்டுபிடிக்க இருக்கிறீர்கள்? அது மிகப் பெரிய பயங்கரமான சக்தி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதை காவல் துறை கட்டாயம் கண்டுபிடித்து வெளியிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போலவே அவருக்குப் பின்னாலே இன்னும் தொண்டு நிறுவனங்கள் என்னும் பெயரிலே வெளிநாட்டினுடைய நிதி உதவி பெறுவது, இங்கே நிதிகளைச் சேகரிப்பது அதன்வாயிலாக இப்படிப்பட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு உதவி செய்யக்கூடிய நிறுவனங்கள் தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கின்றன. கடந்த ஆண்டுகூட நான் சட்டமன்றத்திலே இதை வலியுறுத்தினேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய முழு விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அவற்றை என்னிடம் வழங்கலாம். என்னிடம் கொடுத்தால் காவல் துறையினர் தீவிர விசாரணை மேற்கொள்வார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு மிக்க நன்றி. அதை நான் தங்களிடத்திலே கொடுக்க இருக்கிறேன். ஆக, இப்படிப்பட்ட தீவிரவாத அமைப்புகள் யாராக இருந்தாலுங்கூட— நானே தீவிரவாத செயல்களில், மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறேன் என்று சொன்னால் என் மீது நடவடிக்கை எடுப்பதில் தவறில்லை. ஆகவே இப்படிப்பட்ட—நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அந்தத் தொண்டு நிறுவனங்கள் மீது கட்டாயம் நடவடிக்கை எடுத்து, ஆய்வு செய்து அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதிலே எனக்கு மாறுப்பட்ட கருத்து இல்லை என்பதை வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாடு காவல் துறை சிறப்பாகப் பணியாற்றுகிறது என்பதில் நமக்கு மாறுபட்ட கருத்தே இல்லை. உலகத்திலே இருக்கக்கூடிய போலீஸில் ஸ்காட்லாண்ட் யார்டு போலீஸ் சிறப்பான போலீஸ். அதற்கு இணையாக, அதை மிஞ்சக்கூடிய வகையிலே நமது காவல் துறையினர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் காவல் துறைக்குக் களங்கம் விளைவிக்கக்கூடிய வகையிலே சில கறுப்பு ஆடுகள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அடையாளம் கண்டு திருத்த வேண்டும்; இல்லையென்றால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்திலே கிளியனூர் காவல் நிலையம் இருக்கிறது. போலீஸ் ஸ்டேசனில் உதவி ஆய்வாளராக இருக்கக்கூடியவர் அவர் பெயரைச் சொல்லவில்லை. அந்தப் பகுதியிலே பார்த்தால் போலீஸ் ஸ்டேசன் பக்கத்தில் சாராயம் விற்கப்படுகிறது. அவர் அவர்களை எல்லாம் கூப்பிட்டு உட்கார வைத்துக்கொண்டு பேசிக் கொண்டு இருப்பார். இது எனக்கு மட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய டி.எஸ்.பி., எஸ்.பி., எல்லோருக்கும் தெரியும். இங்கே டி.ஜி.பி. வரைக்கும் புகார் கொடுக்கப்பட்டது. நடவடிக்கை எடுப்பதாகவும் சொன்னார்கள். நடவடிக்கை இல்லை. அங்கேயே சாராயம் விற்கிறார்கள். ஒரு சிறிய பிரச்சினைக்கு அந்த ஊரில் கடையடைப்பு செய்து, பேருந்துகள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு பத்திரிகையிலே போட்டோவோடு செய்தி வந்தது. நடவடிக்கை இல்லை. அதற்குப்பிறகு அந்தக் கும்பல் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பெட்டிக்கடை வைத்திருக்கக்கூடிய ஒரு பெண்மணியின்மீது டீசலை ஊற்றி நெருப்பு வைக்க முயன்றபோது, தப்பித்து ஓடிவிட்டது. அந்த டீ கடைக்குப் பக்கத்து வீடுகளிலே நெருப்பு வைத்தார்கள். நடவடிக்கை இல்லை. ஆக, இப்படிப்பட்டவர்கள், இந்த





வன்முறை கும்பலுக்கு உறுதுணையாக இருந்து இவர்களே ஊக்குவிக்கிறார்கள் என்று சொன்னால் இவர்கள் எப்படி சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவார்கள்? இப்படிப்பட்ட, காவல் துறைக்குக் களங்கம் விளைவிக்கக்கூடியவர்கள், ஊறுவிளைவிக்கக்கூடியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி. இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இந்தக் காவல் துறையிலே சில நேரங்களிலே தவறுதலாகவே வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அரசியல் கட்சிகள் எல்லாம் போராடுகின்றன என்று சொன்னால், அந்தப் போராட்ட நேரத்திலே முன் எச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்வார்கள். அதில் பார்த்தால் 7(1)(எ) ஆக்ட், அதிலே பெரும்பாலும் உண்மைக்கு மாறாக இங்கே அரசியல் கட்சிகள் எல்லாம் கூடி இருந்தார்கள். பயங்கரமான ஆயுதங்களுடன் திட்டமிட்டு தாக்க முயற்சித்தார்கள் என்று பல்வேறு வழக்குகள் சித்தரிக்கப்படுகின்றன. இது காவல் துறை வழக்கமாக எடுக்கக்கூடிய நடவடிக்கை. நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலும் இதே நிலைதான். யாராக இருந்தாலுங்கூட, உண்மையான வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். பொய் வழக்கு கூடாது, தொடர்ந்து அரசியல் கட்சிகள் மீது மட்டுமல்ல, மற்றவர்கள் மீதும் நிறைய காவல் நிலையங்களிலே வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. உண்மை நிலையை உணர்த்துகின்ற வகையிலே உண்மையான வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். உதாரணத்திற்குப் பார்த்தால் எங்களுடைய டாக்டர் ஐயா அவர்கள் மீது 14 வருடங்களுக்கு முன்னால் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொல்லி, இப்போது வாரண்ட் அனுப்புகிறார்கள். கோர்ட்டுக்குப் போக வேண்டும். காவல் துறை இதிலே என்ன சொல்கிறது என்று சொன்னால், இவர் absconding என்று சொல்கிறது. இதுவரையில் எத்தனை கூட்டங்களிலே பேசுகிறார்கள், பேசியிருக்கிறோம், தேர்தலிலே ஓட்டு சேகரிக்கிறோம், நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறோம், ஆனால் இவர்கள் எல்லாம் absconding என்று சொல்கிறது. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால் அரசியல் கட்சிகளின் மீது பழிவாங்கும் நோக்கத்தோடு இது நடத்தப்படுகிறது என்பதைத்தான் காட்டுகிறது. இதை நான் இங்கே குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். அப்படி இல்லை என்று சொன்னால், இதற்கு முன்னால் 14 வருடங்களாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? காவல் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது?

இப்போது இருக்கக்கூடிய ஆளுங்கட்சி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தூசி தட்டி பழைய வழக்குகளை எல்லாம் எடுத்து நீங்கள் இவர்களை எல்லாம் விசாரணை செய்யுங்கள், நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லுகிறார்களோ என்று எங்களுக்குச் சந்தேகம் வருகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஏற்கெனவே நிறைய வேலை இருக்கிறது. பணிச்சுமை மிக அதிகம். அதனால் டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள் மீது என்னென்ன பழைய வழக்குகள் இருக்கின்றன என்பதை எல்லாம் பார்த்து, தூசி தட்டி, அவற்றின் மீது நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லுகின்ற அளவுக்கு எனக்கு சின்ன புத்தியும் இல்லை, அதற்கான நேரமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிட்ட புகார் ஏதாவது இருந்தால், அதை என்னிடம் தெரிவித்தால் அதைப்பற்றி விசாரிக்கச் சொல்லுகிறேன். 14 வருடங்களாக நடவடிக்கை எடுக்காத ஒரு வழக்கில் திடீரென்று வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது நீதிமன்ற ஆணையாகக்கூட இருக்கலாம். விசாரிக்க வேண்டிய விஷயம், விசாரிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, மகிழ்ச்சியோடு ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** 5 நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இன்னும் 3 உறுப்பினர்கள் பேசவேண்டும். முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

*முற்பகல் 10-45*

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன், பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1991-லே முதலமைச்சராக பொறுப்பேற்ற நேரத்திலே நான் பெண்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக முதல் உத்தரவைப் பிறப்பிக்கிறேன் என்று சொல்லி தமிழ்நாட்டிலே எங்குமே கள்ளச்சாராயம் இருக்கக்கூடாது. அப்படி இருக்கிறது என்று சொன்னால் அந்தக் காவல் நிலையத்திலே பணியாற்றக்கூடிய உதவி ஆய்வாளர், அங்கே இருக்கக்கூடிய கிராம நிர்வாக அலுவலர் பணி நீக்கம் செய்யப்படுவார்கள், நடவடிக்கை



எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு வரைக்கும் எந்த ஆட்சி மாறினாலும்கூட கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டிருக்கிறதா? ஏன் ஒழிக்கப்படவில்லை? ஆகவே, ஒழிக்கப்பட வேண்டுமென்று சொல்லி அரசு முயற்சித்தால், காவல் துறை நடவடிக்கை எடுத்தால் கட்டாயம் ஒழிக்கப்படும். மாற்றமே இல்லை. இந்தக் கள்ளச்சாராயத்தினாலே எவ்வளவு குடும்பங்கள் கிராமப்புறத்திலே இன்று சீரழிந்து கொண்டிருக்கின்றன. பெண்கள், குழந்தைகளெல்லாம் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கூலிக்காரன் குடும்ப வருமானம் எல்லாம் இன்றைக்கு வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எந்த வகையிலும், நீங்கள் அவர்களை விடக்கூடாது. என் தொகுதியிலேயே பார்த்தீர்கள் என்றால் எல்லா இடத்திலேயும் இந்தக் கள்ளச்சாராயம் இருக்கிறது. ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் எல்லாம் மாமூல்தான். Inspector ஆக இருப்பார், ஒரு S.I. அல்லது Head Constable போய் மாமூல் வசூல் செய்துகொண்டு இருப்பார்கள். அந்த ஸ்டேஷனிலேகூட நல்ல காவல் துறை அதிகாரிகளும் இருக்கிறார்கள், இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆகவே, இந்த கள்ளச்சாராயம் கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டுமென்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, காவல் துறையினுடைய மிகப் பெரிய கோரிக்கை. முதலமைச்சர் அவர்கள்கூட இந்தக் குறைகளையெல்லாம் களைய வேண்டுமென்று அவர்களை கூப்பிட்டு நீங்கள் மனுக்களையெல்லாம் பெற்றீர்கள், குறை கேட்டீர்கள். இருந்தாலுங்கூட, அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை என்பது ஊதிய உயர்வு. அது, இரண்டாம் நிலைக் காவலர், முதல்நிலைக் காவலர், உதவி ஆய்வாளர், ஆய்வாளர், டி.எஸ்.பி. இப்படி எல்லா பணிநிலைகளில் இருக்கக்கூடியவர்களுக்கும் ஊதிய உயர்வு இல்லாமல் இருக்கிறது. அதிலே, ஊதிய உயர்வுக்காக நான் 1999-2000-த்திலே சட்டமன்றத்திலே பேசிய நேரத்திலே ஊதிய உயர்வு வழங்கப்படுவதாக நம்முடைய காவல் துறை இயக்குநர் அவர்களாலே, ஊதிய விகிதங்கள் மாறுதலாக அமைக்கப்பட்டு இதையெல்லாம் அரசு உடனடியாக அனுமதிக்க வேண்டுமென்று சொல்லி முன் மொழிந்த கருத்துருக்களெல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. அது இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. இது மிகப்பெரிய பிரச்சினை. இப்படி காவல் துறையிலே இருக்கக்கூடிய எல்லா பணியாளர்களுக்கும் இந்த ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2003 ஏப்ரல் 9

அடுத்து காவல் துறை பணி என்பது மற்ற துறைகளைவிட மிக முக்கியமான, மகத்தான பணி. அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. அவர்களுக்கு 24 மணி நேரமும் பணி—எந்த நேரத்திலே இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது—ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஒரு நாளைக்கு தன்னுடைய ஒரே மகளுக்கு நிச்சயம் என்று சொல்லி எல்லா விருந்தினர்களையும் மற்றவர்களையும அழைத்து வைத்திருப்பார். திடீரென்று விடியற்காலை நேரத்திலே பக்கத்திலே ஒரு கிராமத்திலே சட்டம் ஒழுங்குப் பிரச்சினை அல்லது தீ விபத்து, ஏதாவதொரு கொலை என்ற தகவல் வந்து உடனே அவர் புறப்படுவார். அவர்கள் வீட்டிலே இருக்கிற மனைவி, பெண் எல்லாம் பதறுவார்கள். சம்பந்தியெல்லாம் வந்திருப்பார்கள். நிச்சயத்திற்கு இருக்கமாட்டார், போலீஸ்காரர் குடும்பம் இப்படித்தானய்யா இருக்கும், வேண்டாம், பெண்ணே வேண்டாம் என்று சொல்வார்கள். ஏன் என்றால் வரதட்சணை கேட்பார்கள் அல்லது சீர் வரிசைகள் எல்லாம் நிறைய கேட்பார்கள் என்று சொல்லி பயந்துகொண்டு போய்விட்டார் என்றெல்லாம் சொல்வார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலை. காவல் துறையினரின் குடும்பங்களிலே பரவலாக இருக்கின்ற காரணத்தினாலே அவர்களுடைய மனக்குமுறல் எங்களுக்குப் பணி நேரம் வரையறுக்கப்பட வேண்டும் என்பது. மற்றத் துறைகளிலே எல்லாம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையினருக்கும் 8 மணி நேரம் என்று வரையறை கட்டாயம் கொண்டு வரப்பட வேண்டும்.

அதைப்போலவே, இதற்கு முன்னாடி கடந்த காலங்களிலே 8 ஆண்டு, 9 ஆண்டு, 10 ஆண்டுகளுக்கு மேலே இருக்காது, அதற்குள் பதவி உயர்வு வழங்கப்பட்டது. ஆனால் இப்போது அப்படி இல்லை. ஆகவே, 8 ஆண்டு, 9 ஆண்டுகளுக்கு உள்ளாக ஒரு நிலையிலிருந்து மற்ற நிலைக்குப் பதவி உயர்வு கட்டாயம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அவர்களுக்கு வாஷிங் அலவன்ஸ் 50 ரூபாய்தான். அதிலேயே ஷேவ் செய்ய வேண்டும். துணிகள் எல்லாம் துவைக்க வேண்டும் என்றால் முடியாது. சலவைக் கூலி எல்லாம் எப்படியிருக்கிறது பாருங்கள். ஆகவே, அதை உயர்த்த வேண்டும். அது மாத்திரம் அல்லாமல், அவர்கள் இன்னும் பல்வேறு கோரிக்கைகளை எல்லாம் வைத்திருக்கிறார்கள்



2003 ஏப்ரல் 9] [திரு. ஜி.கே. மணி]

அடுத்து, ரேஷன் பொருள். இந்த ரேஷன் பொருளையெல்லாம் கிட்டத்தட்ட 90 சதவீதம் பேர் வாங்குவதேயில்லை. அன்று அமரர் எம்.ஜி.ஆர். அவர்களாலே 50 சதவீதம் மானியத்திலே ரேஷன் பொருள்கள் வழங்கப்பட்டன. இன்றைக்கு அவற்றின் விலை என்னவாக இருக்கிறது? ஆகவே, அவற்றையெல்லாம் நீங்கள் ரேஷன் பொருளாகக் கொடுப்பதைவிட அந்த ரேஷன் பொருள்களுக்கு மாதம் இவ்வளவு என்று சொல்லி ஒரு தொகையைக் கொடுத்துவிடலாம்.

அதைப்போல, தொப்பி, பெல்ட், ஷூ எல்லாம் கொடுக்கிறார்கள். அவை அளவு வித்தியாசமாக இருக்கின்றன. அவர்களால் போடவே முடியவில்லை; அவர்கள் பயன்படுத்துவதேயில்லை. வேறு ஏதோ விலைக்கு வாங்கிக்கொள்கிறார்கள். எனவே, இதற்காக, டெண்டர் மூலம் வாங்கக்கூடிய அந்தத் தொகையை அவர்களுக்கே கொடுத்துவிடலாம். இதையும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

அதைப்போலவே, டிரெஸ் கொடுக்கிறீர்கள். அது என்.டி.சி. மில்லிலிருந்துதான் வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். இருந்தாலுங்கூட தரம் குறைவாக இருக்கிறது. காலத்திற்கேற்ப நல்ல துணி தேவைப்படுகின்ற காரணத்தினாலே (மணியடிக்கப்பெற்றது) அதையெல்லாம் அவர்களிடத்திலேயே கொடுத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையிலே அமைச்சுப் பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சம்பளம் குறைவாக இருக்கிறது. இதையும் நீங்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Grade-1 ஆக இருந்தாலும் சரி, Grade-2 ஆக இருந்தாலும் சரி, புரோமோஷன் கொடுக்கிறார்கள். Grade-1-லிருந்து S.I. புரொமோஷன் வருகிறது. பெரும்பாலும் பார்த்தீர்கள் என்றால், 20 வருடம் பணியாற்றியவர்களுக்கு இதுவரையிலேயும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. அப்படி S.I. ஆகப் பதவி உயர்வுக்கு ஆண் முதல் நிலைக் காவலர்கள், பெண் முதல் நிலைக் காவலர்கள் இரண்டு பேருக்கும் சரி, இப்போது தேர்வு வைக்கப்படுகிறது. 20 வருடம் பணியாற்றிவிட்டார்கள் என்றால் 40, 45 வயது ஆகிவிடும். அவர்கள் எப்படி ஓட முடியும்? 2 நிமிடங்கள் வேகமாக ஓடிவிடுவதனாலேயே, அது பணியினுடைய முதிர்ச்சி என்று சொல்லிவிட முடியாது. அல்லது சற்று 1 நிமிடம் அல்லது 1 செகண்டு தாமதமாக ஓடி வருவதனாலே

பணியில் கணக்கம் என்று சொல்லிவிட முடியாது. ஆகவே, இவ்வளவு நாள் பணியாற்றியவர்களுக்கு விதிமுறையை அல்லது அந்தத் தேர்வு முறையைத் தளர்த்தி 10 ஆண்டு, 8 ஆண்டு, 9 ஆண்டு என்று சொன்னால் அவர்களுக்கு பதவி உயர்வு என்ற நிலையை உருவாக்க வேண்டும். சமீபத்திலேகூட ஒரு பதவி உயர்வு. 6 வருடம், 10 வருடம் முன்னாலே பணியில் சேர்ந்தவர்களுக்கும் பின்னாலே சேர்ந்தவர்களுக்கும் ஒரே நேரத்திலே பணி உயர்வு வழங்கப்பட்டது.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். இதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். முடித்து விடுகிறேன். அதைப்போல இன்னொரு முக்கியமான பிரச்சினை. இது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குக்கூடத் தெரியவில்லை. நம்முடைய காவல் துறையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்களுக்கே தெரியவில்லை என்றால் விட்டுவிடுங்கள். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. பரவலாகச் சொல்லப்படுகிறது. காவல் துறையிலே எஸ்.ஆர். அமௌண்ட் என்று ஓர் அமௌண்ட். இது இரகசிய செலவிற்காக வழங்கப்படுகிறது. அதிலேயும் சில அதிகாரிகள் எங்களுடைய மாவட்டம் பதற்றமாக இருக்கிற காரணத்தினாலே சில இடங்களிலே திருட்டு பல்வேறு வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்படுகிற காரணத்தினாலே இதற்கென ஒதுக்கிய தொகை பற்றாக்குறையாக இருக்கிறது என்ற குறையெல்லாம்கூட அவர்களிடம் இருக்கிறது. இது எந்தக் கணக்கிலே பராமரிக்கப்படுகிறது. இது வழங்கப்படுவது உண்மைதானா என்பதை இந்த நேரத்திலே நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேசி முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் குரு. அவர்மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உத்திரமேரூர் பொதுக் கூட்டத்திலே ஏதோ முறைகேடாகப் பேசினார் என்று ஒரு வழக்கு. அப்படிப் பேசவே இல்லை. அப்படி எதிர்க்கட்சிக்காரர்கள் மேடைகளிலே பேசுவதாக வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன என்று சொன்னால், ஆளுங்கட்சியிலே, அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் ஒரு சிலர் எவ்வளவு முறைகேடாக கொச்சைப்படுத்தும் வகையிலே, மற்றவர்கள் மனது புண்படும் வகையிலே பேசுகிறார்கள்? அவர்கள் மேலே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? அப்படி எதிர்க்கட்சிக்காரர்கள் மீது மட்டும் ஏன் இந்த நடவடிக்கை என்பதையும் இந்த நேரத்திலே வற்புறுத்தி கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இது பழி வாங்கும் போக்கு ஆகும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் நான் மீண்டும் மீண்டும் இங்கே வலியுறுத்த விரும்புவது காவல் நிலையங்களிலே பதிவு செய்யக்கூடிய வழக்குகள் பெரும்பாலும் உண்மைக்கு மாறான வழக்கு ** அது யாராக இருந்தாலுங்கூட உண்மையான வழக்குகள் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற ஒரு நிலை தமிழகத்திலே இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மைக்கு மாறான வழக்கு என்று சொல்லிவிட்டீர்கள். அப்புறம் ** என்பது எதற்கு? அந்த வார்த்தை தேவையில்லையே?

**திரு. ஜி.கே. மணி:** அந்த வார்த்தையைச் சொல்லவில்லை. ஆகவே, அரசு காவல் துறைக்கு கடுமையான உத்தரவு பிறப்பிக்க வேண்டும். எங்கே பார்த்தாலும் சரி, அண்ணா தி.மு.க. மேல் எவ்வளவு வழக்கை சுமந்தீர்கள். எனக்குத் தெரியும்; இல்லையென்று சொல்லவில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. ஜி.கே. மணி:** அந்த வகையிலே காவல் துறை மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீயணைப்புத் துறையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத் தனியாக வைத்துக் கொள்வோம், ஒரு நாள். திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட, ஏற்பட குற்றங்கள், புதுவிதமான குற்றங்கள் வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. இப்போதெல்லாம் Cyber space crime- வந்து கொண்டிருக்கிறது. எனவே, காவல் துறையை நவீனப்படுத்துவது இன்றியமையாததாகும். இதற்காக கடந்த 2 ஆண்டுகள், மத்திய, மாநில அரசுகள் 272 கோடி ரூபாய் காவல் துறையை நவீனப்படுத்துகின்ற செயலில் செலவு செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

காவல் துறையைப் பொறுத்தவரை அவர்கள் 24 மணி நேரமும் பணியாற்றுகின்ற ஒரு கட்டாயத்திலே இருப்பவர்கள். மிகவும் கடினமான ஒரு சூழ்நிலையில் பணியாற்றுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய அலுவல் தொடர்பான, பணி தொடர்பான விஷயங்களிலே நவீனப்படுத்துவதோடு தனிப்பட்ட முறையிலும் அவர்களுடைய தேவைகளும், சௌகரியங்களும் அரசால் பரிவோடு கவனிக்கப்பட வேண்டும் என்பதிலே இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. அதேசமயம் காவல் துறையைச் சார்ந்தவர்கள் மக்களோடு, அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற, பிரச்சினையைத் தீர்க்கின்ற நண்பனாக இருக்க வேண்டும். இதைப் பொறுத்தவரை எங்கள் காரைக்குடி பகுதியிலே Friends of Police மிகச் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. D.S.P. ரொம்பச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார் என்கிற மகிழ்ச்சியை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தீவிரவாதிகள், பயங்கரவாதிகளை எதிர்கொள்ளும்போது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது காவல் துறையினர் பல இன்னல்களையும், நல்ல முறையிலே செயலாற்றும்போது ஏச்சு பேச்சுகளையும்கூட அவர்கள் எதிர்கொள்ள வேண்டி வருகிறது. அதாவது தீவிரவாதி தப்பிவிட்டாலும் காவல் துறையைக் குற்றம்



சொல்கின்றனர். தீவிரவாதியைச் சுட்டுவிட்டாலும் குற்றம் சொல்கின்ற ஒரு சூழ்நிலையானது இருக்கிறது. இது வருந்தத்தக்கது. இமாம் அலி, ஹைதர் அலி போன்றவர்கள் தப்பியபோது காவல் துறை விமர்சிக்கப்பட்டது. ஆனால், இப்போது ராஜாராம், சரவணன் போன்ற தீவிரவாதிகள் தப்பிச் செல்ல முயற்சிக்கும்போது அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதையும்கூட ஒரு சிலர் விமர்சித்தார்கள். ஆனால் இம்மாதிரி தீவிரவாதிகள் தப்பிச் சென்று சமூகத்திற்கு விரோதமாகச் செயலாற்றுவதைவிட, தப்பிச் செல்லவிடாமல் சுட்டுக் கொன்றதை பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். அதோடுகூட, அதிலே காயமுற்றிருக்கிற D.C. கலியமூர்த்தி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள். அரசாங்கம் அவருக்கு ஏதாவது விருது அல்லது accelerated promotion போன்ற ஏதாவது ஒரு incentive கொடுப்பதன் மூலம் இம்மாதிரியாகத் துணிந்து செயலாற்றுகின்ற ஒரு தன்மையை காவல் துறை அதிகாரிகள் மத்தியிலே கொண்டு வர முடியும் என்கின்ற என்னுடைய கருத்தையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

2002 ஆம் ஆண்டிலே சொத்து வழக்குகள் 6.7 சதவீதம் அதிகரித்துள்ளதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நேற்றைய தினம்கூட, கரூரிலே, புகளூரிலே காகித ஆலைத் தொழிலாளர்கள் குடியிருப்பிலே ஒரே நாளிலே 8 வீடுகளிலே கொள்ளை நடந்திருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது.

சென்ற வாரம் இதேபோல, விழுப்புரத்திலே 13 இடங்களிலே ஒரே நாளிலே திருட்டுகள் நடந்திருக்கின்றன என்றும் செய்திகள் வந்திருக்கின்றன. இம்மாதிரியான செயல்களிலே சாதாரணமாக, ஒரு பழக்கம் இல்லாத கும்பல் ஈடுபட முடியாது. ஏனென்றால், ஓர் ஊரிலே ஒரு நாளிலே பல இடங்களிலே கொள்ளையிலே ஈடுபடக்கூடியது ஒரு organised group-ஆக இருக்க வேண்டும். பல நவீன கண்டுபிடிப்பு வசதிகள் வளர்ந்து வருகிற சூழ்நிலையிலே இம்மாதிரியான organised theft-க்கு எதிராகத் தற்காப்பு நடவடிக்கைகளை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க காவல் துறை ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பெண்களுக்கு எதிரான குற்றங்கள்பற்றி நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட விளக்கத்திலே சொன்னார்கள். அது கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் இருக்கிறது. அனைத்து வகைக் குற்றங்களும் அதிகரித்துள்ளன; ஆனால் பாதிக்கப்பட்ட பெண்கள் சுதந்திரமாக வந்து புகார்களை அளிக்கின்ற காரணத்தினாலே இது அதிகமாக இருக்கிறது என்று இங்கே முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், பாலியல் பலாத்காரம் 70 சதவீதத்திற்கு மேல் அதிகரித்திருக்கிறது சென்ற ஆண்டைவிட. இதிலே பெண்கள் உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுக்கும்போது, அந்தப் புகாரில் யாரைப்பற்றி இவர்கள் குற்றம் சுமத்தியிருக்கிறார்களோ, அவர்கள் கைக்கே அந்தப் புகார் போய்ச் சேர்ந்துவிடுகிறது. உதாரணமாக, அண்ணா நகரிலே பெண்களுக்கான பள்ளிக்கூடத்திலே வேன் டிரைவர் அந்தப் பெண்களிடம் பாலியல் துன்புறுத்தலிலே ஈடுபடுகிறார் என்று ஒரு புகாரானது கொடுக்கப்படுகிறது. மறு நாளைக்கு அது, கீழே percolate-ஆகி மேலே, அந்த வேன் டிரைவருக்கே இந்த நபர்தான், பாலகிருஷ்ணன் என்பவர் உங்களுக்கு எதிராகப் புகார் கொடுத்திருக்கிறார் என்று தெரிவித்துவிடுகிறார்கள். அவர்கள் பயமுறுத்துகிறார்கள். வேனிலே வருகிற குழந்தைகள் வீடுகளுக்குப் போய் குழந்தைகளையும், பெற்றோர்களையும் பயமுறுத்துகிறார்கள். ஆகவே, இதிலே காவல் துறையிலே கவனிக்க வேண்டியது இம்மாதிரி புகார்கள் வருமானால், யார் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்பதை வெளியிடாமல் அதற்கான புலனாய்விலே காவல் துறை ஈடுபடுவது, குற்றத்தை வெகுவாகக் கண்டுபிடிப்பதற்கும் குற்றவாளியே, குற்றம் சாட்டியவர்களை மிரட்டுவதிலிருந்து தடுப்பதற்கும் உதவியாக இருக்கும். இதுபோன்று, 3, 4 சம்பவங்கள் சென்னையிலேயே என் கவனத்திற்கு வந்திருக்கின்றன.

அதேபோல, பெண்கள் காவல் நிலையங்களிலே புகார்கள் கொடுப்பதற்காகப் போகும்போது, பல சமயங்களிலே அங்கே பெண் காவலர்கள் இல்லாத ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. ஏனென்றால் பந்தோபஸ்துக்குப் போயிருக்கிறார்கள்; பாதுகாப்புக்குப் போயிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, பந்தோபஸ்து, பாதுகாப்பு போன்ற பணிகளுக்கு மகளிர் காவலர்களை உபயோகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கின்ற இடங்களிலே அதற்காக, பிரத்யேகமான காவலர்களை வைத்துவிட்டு, பெண் காவல்



நிலையங்களிலே எப்போதும் ஆட்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டுமென நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பான் மசாலா, புகையிலை ஆகியவற்றை 5 ஆண்டுகள் உபயோகப்படுத்துவதற்குத் தடை செய்து தமிழகத்திலே சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்கு ஜனாதிபதி அவர்களும் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கும் ரொம்ப சர்வசகஜமாக எல்லா பெட்டிக் கடைகளிலும், பான் மசாலா, புகையிலை கிடைக்கிறது. இதற்கு எதிராக தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏனென்றால், பள்ளிக்கூடம் போகிற குழந்தைகள், சிறுவர்கள்கூட பான் மசாலாவை உபயோகிக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதில் நிர்வாகமானது அந்தமாதிரி வியாபாரம் செய்கின்றவர்கள் மீது மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

விபச்சாரத் தடுப்பைப் பொறுத்தவரையில் பல்வேறு புதிய விஞ்ஞான ரீதியிலான முறைகள் எல்லாம் Information Technology-எல்லாம் இப்போது இதிலே பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். சமீபத்தில் சினிமா மற்றும் சின்னத் திரையில் நடிக்கின்ற நடிகைகள் உட்பட பலரும் விபச்சாரத்தில் ஈடுபடுவதும், பல பெண்களை அதிலே ஈடுபடுத்துகின்ற செய்திகளும் வந்திருக்கின்றன. இதைப் பொறுத்தவரை எனக்கு ஒரு கருத்திருக்கிறது. இம்மாதிரியான விஷயங்களில் பெண்கள் கைது செய்யப்பட்டவுடனே பத்திரிகையிலே அவர்களுடைய படங்களைப் போட்டு, இடமிருந்து வலம் என்று அவர்களுடைய பெயர்களைப் போட்டு முகவரிகளை கொடுக்கிறார்கள். ஒருவேளை நாளை நீதிமன்றத்திலே அந்தக் குற்றமானது ஆதாரம் இல்லாதது என்று கூறி, குற்றம் நிரூபிக்கப்படாமல்போகும்போது அவர்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை அப்போது மாற்ற முடியாது. ஆகவே, பெண்களுடைய பெருமையைப் பாதுகாக்கின்ற விதத்திலே குற்றம் நிரூபிக்கப்பட்ட பிறகு இம்மாதிரி போடுவதிலே தவறில்லை. ஏனென்றால், ஒரு குற்றவாளி, அவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அதற்குரிய தண்டனையைப் பெற வேண்டும் என்பதிலே இரு வேறு கருத்துகள் கிடையாது. எனவே, இம்மாதிரியான பெண்கள் கைது செய்யப்படுகின்ற சமயத்திலே படத்தைப் போட்டு, அதிலே அவர்கள் பெயர்களை எழுதுவதைத் தவிர்ப்பதற்காக அரசு பத்திரிகைகளுக்கும்கூட ஒரு குறிப்பு கொடுப்பது நல்லது. அந்தத் தகவல்களை நிரூபிக்கப்பட்ட பிறகு கொண்டுவருவது நல்லது.

அதேபோல, விபச்சாரத்தைப் பொறுத்தவரை, அதிலே ஈடுபடுகின்ற ஆண்கள், பெண்களை ஈடுபடுத்துபவர்கள், அதற்கு உந்துதலாக இருப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அதேபோல, ஊர்க்காவல் படையிலே போக்குவரத்து பராமரிப்பு, இரவு சுற்றுக் காவல் பணி, கோவில் திருவிழா பணிகளிலே ஈடுபடுத்துவதற்கு 11,622 நபர்கள் இதிலே பணியாற்றுகிறார்கள் என்று இருக்கிறது. இதை நம்முடைய தேவையை வைத்துப் பார்க்கும்போது மிகவும் குறைவான எண்ணிக்கையாகக் கருதுகிறேன். எனவே அதிகமான நபர்கள் ஊர்க்காவல் படையிலே சேர்ந்து பணியாற்றுவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

பொருளாதார குற்றத் தடுப்பைப் பொறுத்தவரை, பல்வேறு Non-Banking Finance Companies-களிலே கைப்பற்றப்பட்ட பொருள்கள், கார், வேன், கம்ப்யூட்டர், இவையெல்லாம் சரியாகப் பாதுகாக்கப்படாமல், வழக்கு முடியும்போது அந்தப் பொருட்கள் உபயோகத்திற்கு லாயக்காகவோ, விலைபெறக்கூடியதாகவோ இல்லாத சூழ்நிலை பல்வேறு வழக்குகளிலே பார்க்க முடிகிறது. எனவே இம்மாதிரியாகக் கைப்பற்றப்படுகின்ற பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கு வீரப்பன் விஷயத்தைப்பற்றி நேற்றைக்குப் பேசினார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் மத்திய அரசினுடைய விமானப்படை ஹெலிகாப்டர்களும், வானிலிருந்து கண்காணிக்கும் வசதிகளும் ஏற்றுக்கொண்டு இதிலே பயன்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நிச்சயமாக சட்டத்தின் மாட்சிமைக்கு ஒரு சவாலாகவே வீரப்பன் பிரச்சினை தொடர்ந்து இருந்து வருகிறது. எனவே, விரைவிலேயே இந்த வீரப்பன் menace-க்கு ஒரு முடிவு கொண்டு வர வேண்டும் என்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. எச். ராஜா:** இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். நீதிமன்றங்களில் அளிக்கப்பட்ட தீர்ப்புகளைப் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட தண்டனைகள் என்பதிலே ஊட்டியிலே அரசுப் பூங்காவிலே நடந்த



வெடிகுண்டு சம்பவம் மற்றும் தி.மு.க.-வினர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியை எரித்த போராட்டத்தைத் தொடர்ந்து போடப்பட்ட வழக்கு ஆகியவற்றில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல பழனி பாபா கொலை வழக்கு, சுல்தான் மீரான் கொலை வழக்கு ஆகிய வழக்குகளிலெல்லாம்கூட தீர்ப்புகள் வந்திருக்கின்றன. குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கோவை செல்வராஜ் கொலை வழக்கிலே நீதிமன்றம் F.I.R. சரியில்லை என்பதாலும், Prosecution சரியான முறையிலே குற்றத்தை நிருபிக்கவில்லை என்றும் சொல்லி, குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோல மதுரையிலே பேராசிரியர் பரமசிவம் கொலை வழக்கிலும் குற்றவாளிகள்..

*__மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் காவலராக பணியாற்றிக் கொண்டிருந்த காவலர் செல்வராஜ் பணியில் இருக்கும்போது, அல் உம்மா இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட வழக்கு B-1, Bazaar காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு 1998ஆம் ஆண்டு மேல் நடவடிக்கைக்காக C.B., C.I.D.-யிடம் ஒப்படைக்கப்பட்டது. விசாரணையிலே கீழ்க்கண்ட நபர்கள் இக்கொலையைச் செய்திருக்கிறார்கள் என்று தெரிய வந்தது: (1) முகம்மது ஷபி, (2) ஆசிக் (3) அப்பாஸ் (4) அபு தாஹிர் (5) சித்திக் அலி (6) தடா அஸ்லாம் (7) சம்சுதீன் (8) குன்னூர் சாகுல். C.B., C.I.D. எடுத்துக்கொண்ட விடாமுயற்சியின் காரணமாக முகமது ஷஃபி, ஆசிக், அப்பாஸ், அபு தாஹிர் ஆகியோருக்கு மரண தண்டனையும், சித்திக் அலி, தடா அஸ்லாம், சம்சுதீன், முகம்மது அன்சாரி ஆகியோருக்கு ஆயுள் தண்டனையும், ரூபாய் 25,000 அபராதமும் விதிக்கப்பட்டது. மேற்கண்ட தண்டனையை எதிர்த்து குற்றவாளிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு தொடர்ந்தனர். சென்னை உயர் நீதிமன்றம், கீழ்நிலை நீதிமன்றம் வழங்கிய தண்டனையை, 26-2-2003 அன்றைய தீர்ப்பில் இரத்து செய்தது. இத்தீர்ப்பினை எதிர்த்து C.B.,C.I.D. உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் நகல் சென்ற வாரம் C.B.,C.I.D.-க்கு வழங்கப்பட்டது. தற்போது மேல்முறையீடு மனு அரசு வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 9

**திரு. எச். ராஜா:** காவலர் செல்வராஜ் கொலை வழக்கிலே அரசாங்கம் மேல்முறையீடு செய்யும் என்கின்ற தகவலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கோவையிலே சென்ற ஆண்டு கொல்லப்பட்ட கோவை தெற்கு ஆர்.எஸ்.எஸ். தாலுகா செயலாளர் முருகேசன் அவர்களுடைய குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நஷ்டஈடு தர வேண்டும் என்று இங்கு நான் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். சிவகங்கை மாவட்டத்திலே கண்ணங்குடி ஒன்றியத்திற்கு காவல் நிலையமே இல்லாமல் இருக்கிறது. அதற்கு தேவகோட்டையிலேதான் காவல் நிலையம் இருக்கிறது. ஆகவே, கண்ணங்குடி ஒன்றியத்திற்கு ஒரு காவல் நிலையம் கொண்டுவர வேண்டும். அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

பொதுவாகவே காவல் துறையிலே நல்ல அதிகாரிகளும் இருக்கிறார்கள், apolitical-ஆகவும் இருக்கிறார்கள். ஆனால், ஒருசில அதிகாரிகள் வேண்டுமென்றே ஒருசில சக்திகளுக்குப் பாரபட்சமாக நடந்து வருவதையும் நம்மால் பார்க்க முடிகிறது. உதாரணமாக, தேவகோட்டையிலே டி.எஸ்.பி., சி.பி.எம்.எல். போன்ற கட்சிகளுக்கு கோளப்பூரிலே, திருப்பாக்கோட்டை, தேவகோட்டை போன்ற இடங்களிலே பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி தருகிறார்கள். அந்தக் கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப்பற்றியும், மாண்புமிகு துணைப் பிரதமர் அவர்களைப் பற்றியும் மிக மோசமாக, கேவலமாகப் பேசுகின்ற விதத்தில் அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுடைய அரசின் சாதனைகளை 'கிராமம் செல்வோம்' என்கின்ற நிகழ்ச்சிக்காக நாங்கள் அதற்காக அனுமதி கேட்டால்—பாரதிய ஜனதா கட்சி இதுவரை 5 முறை கேட்டும்—அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக நான் டி.எஸ்.பி.-யிடம் கேட்கும்போது, 'இந்தமாதிரியான கேள்விகளை எல்லாம் கேட்டால் உன் பிரச்சினை வில்லங்கம் ஆகிவிடும்' என்று என்னை மிரட்டுகின்ற அளவிற்கு ஒரு டி.எஸ்.பி. செயல்படுவது மிகவும் துரதிருஷ்டவசமான ஒரு விஷயம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து எழுத்தில் ஒரு புகார் என்னிடம் தந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 9]

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. இதுபற்றி ஏற்கெனவே நான் டி.ஜி.பி.-க்கு 2 முறை புகார் கொடுத்திருக்கிறேன். இப்போது தங்களுக்கு அந்தப் புகாரைத் தருகிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாக்கோட்டையிலே காவலர் குடியிருப்பு, இரண்டே இரண்டு வீடுகள்தான் இருக்கின்றன. அங்கே கிட்டத்தட்ட 30 பேர் பணியாற்றுகிறார்கள். எனவே, இப்போது 3000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதிலே, சாக்கோட்டைக்கு நீங்கள் ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இங்கு ஒரு பள்ளியிலே இந்திய வரைபடத்தில் காஷ்மீர் இல்லாமலே அவர்களுடைய மலரிலே போட்டு வெளியிட்டு இருக்கிறார்கள். அதைப்பற்றி காவல் துறையினரிடம் புகார் கொடுத்தும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. செஞ்சியிலே இருக்கின்ற ஒரு பள்ளியினுடைய ஆண்டு விழா மலரிலே காஷ்மீர் இல்லாத ஒரு இந்திய வரைபடமானது பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. இதுபற்றி காவல் துறையிலே நான் புகார் கொடுத்தும்கூட, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த விவாதத்தின்பேரிலே பேச வாய்ப்பளித்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவல் துறை என்பது ஆட்சிக்கு ஒரு சின்னமாய், மக்களிடையே ஓர் ஊடகமாய் இருந்து கொண்டிருக்கிற ஒரு துறை. இந்தத் துறையைத்தான் தமிழ்நாட்டிலே இருக்கிற கோடிக்கணக்கான பாமர மக்கள் ஆட்சியாகவே கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, ஓர் அரசின் செயல்பாடுகளுக்கு, நடவடிக்கைகளுக்கு உறை கல் என்று சொன்னால், அது காவல் துறை என்று சொல்லலாம். உறை கல்லாக இருக்கக்கூடிய இந்தத் துறை மீதான

[திரு. செ.கு. தமிழரசன்] [2003 ஏப்ரல் 9

விவாதத்திலே எதிர்கட்சிகள் எல்லாம், ஒவ்வோர் ஆண்டும் ஏதேனும் ஒரு காரணம் சொல்லி வெளிநடப்புச் செய்கிறார்கள் என்று சொன்னால், இந்த ஆட்சி குறித்து விவாதத்திலே பங்கேற்றுக்கொள்வதற்கு அவர்களுக்குத் துணிவில்லை என்றே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உறை கல். இந்தத் துறை பிரதான துறை. ஓர் ஆட்சியின் செயல்பாடுகளை, நடவடிக்கைகளை நாட்டு மக்களுக்கு ஊடகமாக இருந்து செயல்படுத்திக்கொண்டிருக்கிற ஒரு துறை. இந்தத் துறை தொடர்பான விவாதத்திலே நேருக்கு நேர் நின்று விவாதிப்பதற்கு எதிர்க் கட்சிகள் முன்வரவில்லை என்று சொன்னால், குறை சொல்ல எதுவும் இல்லை; இல்லாவிட்டால் எதிர்கொள்ளத் துணிவில்லை என்றுதானே இதற்குப் பொருள்.

இந்த விவாதத்திலே, நான் பங்கு கொள்கிறபோது ஒன்றைச் சொல்ல வேண்டும். இது இந்தத் துறை தொடர்பானதுதான். கோட்டை என்றாலே, அது காவல் துறை இருப்பதுதான். கோட்டையைக் காப்பது காவல் துறை. கோட்டை என்றாலே காவலோடு இருப்பதுதான் கோட்டை. ஆகவே, கோட்டை குறித்து ஒரு செய்தியை இந்தத் துறையின் விவாதத்திலே நான் சொல்வதில் தவறில்லை. தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இன்றைக்கு சென்னை கோட்டையை மாற்றவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறார்கள். இந்தக் கோட்டை தென்னிந்தியாவிலேயே மிகப் பழமையான கோட்டை. தென்னிந்தியாவிலேயே 80 ஆண்டுகால பெருமை படைத்த கோட்டை. ஆனால் ஒன்று, இன்றும் சாதாரண கிராம மக்களுக்குக்கூட தெரியாது. 80 ஆண்டுகால சட்டமன்ற மரபு படைத்த நமது தமிழ்நாட்டிற்கு ஒரு குறை இருப்பது கிராம மக்களுக்கே தெரியாது. பக்கத்திலே இருக்கிற பெங்களூரிலே விதான் சௌதான் இருக்கிறது; சட்டமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம். பக்கத்திலே இருக்கிற கேரளாவிலே சட்டமன்ற வளாகம் இருக்கிறது; சட்டமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம்.

*முற்பகல் 11-10*

பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே, ஹைதராபாத்திலே சட்டமன்றம் இருக்கிறது. சட்டமன்றத்திற்கு அங்கே சொந்தக் கட்டடம் இருக்கிறது. ஏன் நம்முடைய மாநிலத்திற்கு மிக அருகிலே இருக்கிற பாண்டிச்சேரி, ஒரு சின்ன மாநிலம். அந்த மாநிலத்திற்குகூட



2003 ஏப்ரல் 9] [திரு. செ.கு. தமிழரசன்]

சட்டமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் இருக்கிறது. தென்னிந்தியாவிலே பழமைபெற்ற, 80 ஆண்டுகால அனுபவமிக்க, 80 ஆண்டுகால பெருமைபடைத்த இந்தச் சட்டமன்றத்திற்கு நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. வாடகையிலே இதுவரையிலே இருந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தென்னிந்தியாவிலேயே வாடகையிலே இருந்து கொண்டிருக்கிற ஒரே சட்டமன்றக் கட்டடம், நம்முடைய சட்டமன்றக் கட்டடம்தான். இந்தச் சட்டமன்றக் கட்டடத்தை மாற்றி ஒரு புதிய இடத்திலே தென்னிந்தியாவிலேயே பிற மாநிலங்களுக்கு நிகராக ஒரு கோட்டையை உருவாக்குவோம் என்கிற சிந்தனை இன்றைக்கு இந்தத் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி), அதற்காக இன்றைக்கு ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டு மக்கள் அதைப் பெருமையோடு வரவேற்க வேண்டும்; பாராட்ட வேண்டும்; கட்சிகள் வரவேற்க வேண்டும். ஆனால் என்ன பெரிய ஒரு துரதிருஷ்டம் என்றால், தமிழ்நாட்டில் இருக்கிற கலைஞர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், தலைவர்களுக்கும், தளபதிகளுக்கும் பழம் பெருமையையே பாடிப் பாடிப் பழக்கம். ராஜராஜன் அந்தத் தஞ்சைக் கோயிலைக் கட்டினான், மாமல்லபுரத்திலே பல்லவன் கட்டினான். இப்படிப் பழம் பெருமையையே பாடிப் பழக்கம். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஒரு புது பெருமையை, நூறாண்டுகால சட்டமன்றத்திற்குப் புதிய கட்டடம் ஒன்றை, எழிலார்ந்த கட்டடத்தை, பாராட்டக்கூடிய கட்டடத்தை, ஒரு புதுப் பெருமையை உருவாக்குகிற புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

*"போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித்*
*தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்*
*ஏற்றதொரு கருத்து எனதுள்ள மென்றால்*
*எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன், அஞ்சேன்"*

எது தடுத்தாலும் அதை உடைத்தெறிவேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அளவிலே செய்து கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

காவல் துறையின் நடவடிக்கைகளை நாம் அலசுகின்றபோது தீவிரவாதம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று முதலிலே பார்க்க வேண்டும். உலக வங்கியே ஒரு பெருந்தொழில் தொடங்க வேண்டுமென்றால் அதைத்தான் அவர்கள் முதல் அடையாளக் குறியீடாக சொல்கிறார்கள். அங்கே அமைதி இருக்கிறதா; தீவிரவாதம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதா; பெருந்தொழில்கள் தொடங்குகிற அளவுக்கு அப்படிப்பட்ட சூழ்நிலைகள் அங்கே இருக்கின்றனவா என்று உலக வங்கியே அதைத்தான் ஓர் இலக்கணமாய், அதை ஒரு மரபாகவே பின்பற்றிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இன்றைக்குத் தீவிரவாத நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. தீவிரவாதத்தை ஆதரிப்பவர்களும் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளே வைக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யாராக இருந்தாலும், தீவிரவாத நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைச் செய்பவர்கள் மட்டுமல்லாமல், ஆதரிப்பவர்களும் இன்றைக்குக் கட்டுக்குள் இருக்கிறார்கள். பம்பாயிலே ஒரு குண்டுவெடிப்பு நடந்தது. இந்தியாவையே அதிர வைத்த குண்டுவெடிப்பு. இதுவரையிலும் அந்தக் குற்றவாளிகளைக் கண்டறிய முடியவில்லை. கோவையிலே குண்டுவெடிப்பு நடந்தது. அப்போது அதற்கு முன்னெச்சரிக்கையாகவே, கோவையிலே குண்டு வெடிப்பு நிகழ இருக்கிறது; நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே பலர் அன்றைக்கு இருந்த அரசியல் ஆட்சியாளர்களிடம் சொன்னார்கள். சொன்னாலும் அவர்கள் காதில் போட்டுக்கொள்ளவில்லை. மிகப் பெரிய குண்டுவெடிப்பு நடந்தது. கண்டறிய முடியவில்லை. ஆனால் இன்றைக்குத் தமிழ்நாட்டில் முன்னெச்சரிக்கையாக நாளை நிகழக்கூடியவற்றை இன்றைக்கு நுண்ணறிவோடு, இந்தத் துறையை தன்னுடைய கட்டுக்கோப்பிலே வைத்திருக்கிற முதலமைச்சர் அவர்கள், அறிந்து, தொடர்ந்து தமிழ்நாட்டிலே தீவிரவாதச் செயல்களே இல்லை என்கிற அளவுக்கு இரண்டு ஆண்டுகளாகக் கட்டுக்கோப்பிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதை நாம் மனம் திறந்து பாராட்டியாக வேண்டும்.

துப்பாக்கிச் சூடு இல்லை; தடியடிப்பிரயோகம்கூட இல்லை; இனக் கலவரம் இல்லை; மதக் கலவரம் இல்லை; ஜாதிய மோதல் இல்லை.



இந்த இரண்டாண்டு காலத்திலே இவற்றை எல்லாம் பட்டியலிட்டுச் சொல்ல முடியுமா? கடந்த ஐந்தாண்டுகாலத்தில், இனக் கலவரத்திலே நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இறந்தார்கள். அது உண்மை இல்லையா? ஜாதிய மோதல்களிலே நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தாக்கப்பட்டார்களே, கொலை செய்யப்பட்டார்களே, அது வரலாறு இல்லையா? இன்றைக்குத் தாமிரபரணிகள் இல்லை. மேலவளவுகள் இல்லை. இவை எல்லாம் எப்படிக் கட்டுப்படுத்தப்பட்டன? சென்னை மத்திய சிறைச்சாலையில் இருக்கிற சிறைக் கைதிகள்கூட நிம்மதியாக வாழ முடியாத நிலைமை இருந்ததே! அங்கேயே பாதுகாப்பு இல்லையே! சிறைச்சாலையின் அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. சிறைச்சாலையில் உள்ளே இருந்தவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. சிறைச்சாலையிலே அவை வெறும் பெரிய கொலைக் கூடங்களாக மாறியதை அன்றைக்குப் பார்க்க முடிந்தது. இன்றைக்கு அப்படிப் பட்டியலிட்டு ஏதாவது சொல்ல முடியுமா, இரண்டாண்டு காலத்திலே?

*முற்பகல் 11-15*

ஒரு நாட்டிலே மக்கள் பாதுகாப்பு உணர்வோடு இருக்க வேண்டும். அதுதான் அந்த ஆட்சியினுடைய சிறப்பு. ஒரு பாதுகாப்பு உணர்வு நமக்கு இருக்கிறது. நம்முடைய உயிர்களுக்கு, உடைமைகளுக்குப் பாதுகாப்பு உணர்வு இருக்கிறது என்கிற அந்த உணர்வு வரவேண்டும். அதற்கு மேலே எது வந்தாலும், எதை மீறி வந்தாலும், அதன் மேலே நடவடிக்கை எடுக்கிற நல்ல அரசு இருக்கிறது என்ற நம்பிக்கை வரவேண்டும். பாதுகாப்பு உணர்வு வரவேண்டும். ஆட்சியின்பேரிலே, அந்தத் துறையின்பேரிலே நம்பிக்கை வரவேண்டும். இந்தப் பாதுகாப்பு, இந்த நம்பிக்கை இன்றைக்கு மக்களிடையே இருக்கிறது. ஒரு நாளைக்கு 24 மணி நேரத்திலே 18 மணி நேரம் உழைக்கக்கூடிய முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன கேட்பாரோ, எப்போது கேட்பாரோ, எப்படிக் கேட்பாரோ என்று அந்தத் துறையிலே இருக்கின்றவர்கள் தூங்காமல் பணியாற்றுகின்ற ஒரு நிலைமை இன்றைக்குக் காவல் துறையிலே ஏற்பட்டிருக்கிறது. முதலமைச்சர், என்றைக்கு, எப்போது, என்ன கேட்பாரோ, எப்படிக் கேட்பாரோ, எதைக் கேட்பாரோ என்று அவர்கள் தூங்காமல் துடிப்போடு பணியாற்றுகிற ஒரு நிலைமை இன்றைக்கு அங்கே இருப்பதனாலேதான், அப்படிப்பட்ட நிலைமை

இருப்பதனாலேதான் இன்றைக்குப் பாதுகாப்பு உணர்வு இருக்கிறது; நம்பிக்கை இருக்கிறது. யார் போய்ச் சொன்னாலும், முதலமைச்சருக்குத் தெரியுமானால், முதலமைச்சருடைய எண்ணத்திற்கு இது கொண்டுபோகப்படுமேயானால், கட்டாயம் நடவடிக்கை இருக்கும். அந்த நடவடிக்கையை யாராலும் தடுக்க முடியாது என்கிற உணர்வு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்கள்கூட மறுக்க முடியாது. முதலமைச்சருடைய எண்ணத்திற்கும், அவருடைய கவனத்திற்கும் இது கொண்டுபோகப்படுமேயானால், கட்டாயமாக நடவடிக்கை உண்டு. அதை யாராலும் தடுக்க முடியாது.

முதலமைச்சர் அவர்களுக்கு இரண்டு கரங்கள் இருக்கின்றன. ஒரு கரம், அரசியலிலேயானாலும், நிர்வாகத்திலேயானாலும் தன்னை ஆதரிப்பவர்களை, நம்பியவர்களை, தங்களுடைய பிரச்சினைகளைக் கொண்டுவந்து தருபவர்களை, அவர்களுடைய வேதனைகளைப் புரிந்துகொண்டு, ஆதரிக்கிற கரும்புக் கரம். இன்னொரு கரம், எதிர்ப்போரை, எப்படிப்பட்ட நிலைமையானாலும், அவரை வீழ்த்துகிற, அநியாயங்களை, அக்கிரமங்களை அடக்கி வைக்கிற இரும்புக் கரம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஒரு கரம் கனிவோடு ஆதரிக்கின்ற கரும்புக் கரம்; இன்னொரு கரம், எஃகு உள்ளத்தோடு, எதிரிகளை அடக்குகிற இரும்புக் கரம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இரும்புக் கரத்தாலும், கரும்புக் கரத்தாலும், அந்த மாறுபட்ட செயல்பாடுகளோடு இன்றைக்குக் காவல் துறையை அவர்கள் மிகுந்த கட்டுப்பாட்டிலே வைத்திருக்கிறார்கள்.

ஒரு கட்டத்திலே தென் மண்டலம் என்றால், கல்லூரிக்குப் போகின்ற பையனும், பள்ளிக்கூடத்திற்குப் போகின்ற மாணவனும் வீடு திரும்புவானா, பாதியிலே ஏதாவது கலவரம் வந்து பஸ் நின்றுவிடுமா; ஜாதி மோதல் எங்கேயாவது ஏற்பட்டு, போன பஸ் திரும்பி வருமா; இன்றைக்குக் கல்யாணத் தேதி குறித்தால்கூட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள். சந்தானம் பேச வேண்டும்.

**திரு. செ.கு. தமிழரசன்:** ஒரு கல்யாணத் தேதி குறித்தால்கூட, அந்தத் தேதியிலே, அந்தக் கல்யாணத்திற்குச் சொந்தக்காரர்கள் வந்து சேர்வார்களா என்ற அவலமும், அவநம்பிக்கையுமான சூழலை தென் மண்டலங்களிலும், வட மண்டலங்களிலும், பார்க்க முடிந்தது. ஜாதியக்



கலவரங்கள், இன மோதல்கள் போன்றவற்றால் போகிற பஸ் வருமா, இப்படிப்பட்ட ஒரு நிலைமை. 1991-லேயிருந்து 1996 வரை தமிழக முதலமைச்சராக புரட்சித் தலைவி அவர்கள் இருந்தபோது, மாவட்டங்களுக்கெல்லாம் பெரிய புகழ்பெற்ற, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தலைவர்களுடைய பெயர்களை வைத்தார்கள். போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெயர் வைத்தார்கள். பிரச்சினை இல்லாமல் இருந்தது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு மாவீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைத்தார்கள். பஸ்ஸை ஓட்ட முடியவில்லை. என்ன நடந்தது என்றால், அதற்குப் பரிகாரம், இருந்த எல்லாப் பெயர்களும் எடுக்கப்பட்டன. இருந்த எல்லா மாவட்டத்துப் பெயர்களும் எடுக்கப்பட்டன. அதுதான் பரிகாரமாக, தீர்வாக இருந்ததே தவிர, அந்தப் போக்குவரத்துக் கழகத்தை இயக்க முடியவில்லை. மாறாக, இருந்த எல்லாவற்றையும் எடுக்க வேண்டும் என்கிற உணர்வு அப்படிப்பட்ட நிலைப்பாடுதான் அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்தது. ஆனால், இன்றைக்கு அப்படி முடியுமா?

ஓடாத கண்டதேவி தேரை இன்றைக்கு ஓட்டிக் காட்டியவர் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒடுக்கப்பட்ட மக்கள், தலித் மக்கள் வந்து, வடம் பிடிக்கலாமா; தலித் மக்கள் வடம் பிடித்தால் அந்தத் தேர் ஓடுமா என்று தடுத்தபோது, ஓடாத தேரை இன்றைக்கு ஓட வைத்த பெருமை; தலித் மக்களும் அந்தத் தேரை இழுத்துக் கொண்டு சென்ற பெருமையை, இன்றைக்குத் தமிழகத்திலே ஏற்படுத்திக் காட்டியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். ஆக, இந்தச் சந்தர்ப்பத்திலே நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். உங்களால்தான் முடியும். உங்கள் ஒருவரால்தான் ஒடுக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் உறுதியோடு செயலாற்ற முடியும் என்பதனாலே நான் சொல்ல விரும்புகிறேன். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் ஆகிய இடங்களில் தேர்தல் நடத்த முடியவில்லை, நேற்றைக்கு அங்கேகூட தேர்தல் நடக்கவில்லை. ஒன்பது ஆண்டு காலத்திற்கு மேலே அந்தப் பகுதிகளிலே தேர்தல் நடத்த முடியவில்லை. ஏதேனும் ஒருவகையிலே அதை நீங்கள்தான் செய்து காட்ட முடியும்; செய்ய வேண்டும். இந்தத் தேர்தலை நடத்த வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு முறை அங்கே

மறுக்கப்படுகிறது. அது முன்னுதாரணமாக பிற பகுதிகளுக்கு வந்து விடக்கூடாது என்கின்ற அந்த அச்ச உணர்வாலே நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11-20*

இங்கே மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர், ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்றபோது, பி.சி.ஆர். சட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். பி.சி.ஆர். சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும், அது தாழ்த்தப்பட்ட மக்களால் பல நேரங்களிலே தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி அவர்கள் சொன்னார். அவர், அவர்களுடைய தலைவர் சொல்லிக் கொண்டிருக்கின்ற கருத்தை இங்கே சொன்னார்கள். இது இந்தத் தமிழக அரசே போட்ட சட்டமா என்பது இவர்களுக்குத் தெரியாது. 1956 இலே பி.சி.ஆர். சட்டம் யாரால் உருவாக்கப்பட்டது? மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. 1989 இலே எஸ்.சி./எஸ்.டி. அட்ராசிட்டீஸ் ஆக்ட் என்று சொல்லப்படுகிற, தாழ்த்தப்பட்ட மக்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் யாரால் உருவாக்கப்பட்டது? மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டங்களை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று இவர்கள் பேச வேண்டிய இடம், பாராளுமன்றம். பாராளுமன்றத்திலே போய்ப் பேசியிருக்க வேண்டும். ஆனால், அங்கே கூட்டணியிலே இருந்துகொண்டிருக்கிற அவர்கள் இதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று வெளிவரத் தயாரா? வருவார்களா? அங்கே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இதுவரை ஒருமுறையாவது இவர்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலே பேசியிருப்பார்களா? இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோதே, கர்நாடகத்திலேயிருந்து, மத்திய பிரதேசத்திலிருந்து, உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கிற்குப் போனார்கள் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** பேசி முடித்துக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றத்தில் வழக்கிற்குப் போனார்கள். உச்ச நீதிமன்றம் வழக்குத் தொடுத்தவனை எச்சரிக்கை செய்து அனுப்பியது, இனி, இப்படிப்பட்ட வழக்குகளை நீ தொடுக்காதே என்று. தமிழ்நாட்டிலேயே நம்முடைய நீதிபதி கற்பக விநாயகம் அவர்கள் இந்தத் தீர்ப்பைத் தமிழ்நாட்டிலேயும் தந்திருக்கிறார், உயர் நீதிமன்றத்திலே. நான் என்ன சொல்கிறேன் என்றால்,



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே என்ன கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்னால், இதை நீக்க வேண்டுமென்று மாநாடு போடுகிறவர்களை, இந்தச் சட்டத்தின்கீழே நீங்கள் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு இடம் இருக்கிறது. உச்ச நீதிமன்றமே சொல்லியிருக்கிறது. ஆகவே, அதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். பொதுச் சொத்துக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சந்தானம் பேச வேண்டும். சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள். நிறைவு வாக்கியத்தைச் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலேயே சொன்னதைப்போல, காவல் துறை என்பது ஓர் ஆட்சிக்கு ஒரு முத்தாக, ஆட்சியின் மகுடமாக இருந்து கொண்டிருக்கின்ற துறை. ஆகவே, அதில் பேசுவதற்கு சில நிமிடங்கள் வேண்டும். இந்த ஆட்சியிலே காவல் துறை நம்முடைய வணக்கத்திற்குரிய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே எவ்வளவு செம்மையாக இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதோடு, சில பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதற்கு எனக்கு வாய்ப்பளிக்க 5 நிமிடங்கள் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழ்நாட்டிலே இரண்டு ஆண்டு காலமாக, கள்ளச் சாராய சாவுகள் மிகப் பெரிய அளவிலே இல்லை. இங்கொன்றும், அங்கொன்றுமாக இருக்கிறது. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, பண்ருட்டியிலே 100 பேர், பக்கத்திலேயிருக்கிற திருவள்ளூர் மாவட்டத்திலே புற்றூரிலே 20 பேர், ஆற்காட்டிலே 15 பேர், கூட்டங்கூட்டமாய், மந்தைமந்தையாய், கள்ளச்சாராயத்தாலே இறந்த செய்தியை 5 ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடர்ந்து பார்த்தோம். இரண்டு ஆண்டுகாலமாக அப்படிப்பட்ட நிலைமையில்லை.

மூன்று 'க'-க்களைக் கட்டுப்படுத்தினால் போதும். 'க'-வைக் கட்டுப்படுத்தினால் போதும். என்னென்ன 'க' என்றால், முதல் 'க', கள்ளச்சாராயம்; அடுத்த 'க', கட்டப் பஞ்சாயத்து; மூன்றாவது 'க', கந்துவட்டி. இந்த 'க'வைக் கட்டுப்படுத்தினால்போதும். 'க' என்பது இப்போது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இந்த 'க' வைக் கட்டுப்படுத்த வேண்டும். இதைக்



தமிழ்நாடு ... காப்பகம்
184539

கட்டுப்படுத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் கட்டுப்படுத்துகிற அப்படிப்பட்ட அந்த ஆற்றல்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று 'க' மட்டும்தானா?

**திரு. செ.கு. தமிழரசன்:** அவற்றைக் கட்டுப்படுத்தினாலே போதும். கள்ளச் சாராயத்தை, கட்டப் பஞ்சாயத்தை, கந்துவட்டியை கட்டுப்படுத்தினாலே, போதும். இன்றைக்கு இவையெல்லாம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னை மாநகரமானாலும், மற்றப் பகுதிகளில் ஆனாலும் அப்படிப்பட்டவற்றில் துணிந்து யாரும் ஈடுபட முடியாது. ஆளுங்கட்சியேகூட துணிவோடு கொஞ்சம்கூட அதிலே மனமிரங்கி அவர்களை ஆதரிக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு இருக்கிறது என்பதை நான் பாராட்டியாக வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்திலே, ஒயின் ஷாப் எல்லாம் திறந்திருக்கிறோம். கள், சாராயக் கடைகளை நாம் மூடி வைத்திருக்கிறோம். அது ஒரு பெரிய இலட்சிய நோக்கத்தோடு நீங்கள் செய்து கொண்டிருந்தாலுங்கூட, நடைமுறையிலே ஒரு சாதாரண கிராமத்திலேயிருக்கிறவன், 100 ரூபாய், 200 ரூபாய் செலவு செய்து பிராந்தி கடையிலும், ஒயின் ஷாப்பிலும் குடிக்க முடியாது. ஆனால், ஒரு பக்கம் நம்முடைய நிதிநிலைமையாலும், நாட்டிலேயிருக்கின்ற சூழ்நிலையாலும் கடைகளைத் திறந்து இருக்கிறோம். ஆகவே, விவசாயிகளுடைய நலன் கருதியாவது, அடித்தளத்து மக்களுக்கு ஒரு பாதுகாப்பான நிலைமையைக் கருதியாவது, கள்ளுக்கடைகளையாவது திறப்பதற்கு நீங்கள் முயற்சிக்கவேண்டும். அதிலே ஒன்றும் தவறு இல்லை.... . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'க'-ஐ எல்லாம் கட்டுப்படுத்தச் சொல்லிவிட்டு கள்ளுக்கடைகளைத் திறக்கச் சொல்கிறீர்களே? (குறுக்கீடு) திரு. சந்தானம் (குறுக்கீடு) திரு. கணேசன். (குறுக்கீடு) அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. நாடாளுமன்றத்திலே பேச வேண்டுமென்று சொன்னார்.

முற்பகல் 11-25

**திரு. ஐ. கணேசன்:** ஆதாரத்தோடுதான் சொல்கிறோம். தமிழ்நாட்டிலே பிசிஆர். ஆக்ட் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை இங்கேதானே சொல்ல முடியும்?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், அவருடைய கருத்தைச் சொன்னார்.

**திரு. ஐ. கணேசன்:** இங்கே சொல்வதைத் தவறு என்று சொல்லி, பாராளுமன்றத்திலே . . . (குறுக்கீடு) அந்தச் சட்டத்தையே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. தமிழ்நாட்டிலே போடப்பட்ட வழக்குகள் தவறாக இருக்கின்றன என்று, அதற்கு இத்தனை உதாரணங்களைக் கொடுத்துதான் அவர் பேசினாரேயொழிய, அதை யாரோ சொல்லிக் கொடுத்து, தலைவர் சொல்லிக் கொடுத்து என்பதெல்லாம் தவறான ஒரு முன்னுதாரணம். அவர்கள் ஆளுங்கட்சியைப் பாராட்டி எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அவ்வளவுதான் விடுங்கள். திரு. சந்தானம். (குறுக்கீடு) திரு. சந்தானம். (குறுக்கீடு) திரு. செ.கு. தமிழரசன், நீங்கள் முடித்துவிட்டீர்கள். திரு. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** அது தவறு, மிக மோசமான தவறு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள்; முடியுங்கள். திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை . . . . (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். விடுங்கள். ஏற்கெனவே உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். தமிழ்நாட்டிலே முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது; அதைத் தடுக்க வேண்டுமென்று சொல்லி, திரு. மணி பேசினார் என்று சொல்லிவிட்டீர்கள். அவ்வளவுதான், உட்காருங்கள். திரு. சந்தானம்.

* **திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு அனுமதித்த தங்களுக்கு

என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதற்குரிய பதிலைச் சொல்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு வழிவகுத்துக் கொடுத்து, மிகச் சுருக்கமாகவே என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு முற்படுகிறேன்.

காவல் துறை என்பது, இந்தச் சமுதாயத்திற்கு வேலியாக, அவர்களைக் காக்கின்ற அரணாகப் பயன்படுகின்ற ஒரு சிறப்புமிக்க துறை. அந்தத் துறையினுடைய செயல்பாட்டிலேதான் ஓர் அரசுக்கு நல்ல பெயர் ஏற்படுகின்ற நிலை, இந்தச் சமுதாயத்திலே ஏற்படுகிறது. அதன் காரணமாகத்தான், அந்தக் காவல் துறையைப் பொறுத்த அளவிலே, "மெய்வருத்தம் பாரார், கண் துஞ்சார், பசி நோக்கார், செவ்வி அருமையும் பாரார், கருமமே கண்ணாயினார்" என்பதுபோல, அவர்கள் தங்களுடைய உடலினுடைய வருத்தத்தையும் பாராது, கண் துஞ்சாது, இந்தச் சமுதாயத்தைக் காக்கின்ற பொறுப்பினை ஏற்று, பசி வருகின்ற நேரங்களிலேகூட, உரிய நேரத்திலே அவர்கள் ஆகாரத்தை உட்கொள்ள முடியாத அளவுக்குத் தங்களுடைய பணியைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அது இந்த அரசை நடத்துகின்றவர்கள், வழி நடத்துகின்ற அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற முதலமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்பு, அரவணைப்பின் காரணமாகத்தான் இன்றைக்கு அவர்கள் அந்தப் பணியினைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சென்ற காலங்களில் எல்லாம், காவல் துறையினுடைய ஈரலே கெட்டுவிட்டது என்கின்ற சொற்களையெல்லாம் மாற்றி, காவல் துறை திறமையாகச் செயல்படுகிறது என்பதற்கு இன்றைக்கு அந்தப் பொறுப்பினை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் காரணம். இப்போது, இந்தக் கொள்கை குறிப்பிலே குறிப்பிட்டதுபோல கோயம்புத்தூரிலே நடந்த குண்டுவெடிப்பு போன்ற பயங்கர சம்பவங்கள், இந்த ஆட்சியிலே நடைபெறவில்லை. அதுபோல, ஜாதிய மோதல்களின் காரணமாக நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகின்ற நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. அந்த ஜாதிய மோதல்களிலே மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், எங்களைப் போன்றவர்கள் என்கின்ற காரணத்தினால், இப்போது அந்தப் பாதிப்புகள் எல்லாம் இல்லாமல், நிறைவாக, நிம்மதியாக இந்த ஆட்சியிலே இருக்கிறோம் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.



ஒரு காலத்திலே, இப்போது முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியாக இருக்கின்ற கண்டமனூரிலேகூட மிகப் பெரிய கலவரம்; அங்கே இருந்த வீடுகள் எல்லாம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன; அந்த விவசாயிகளினுடைய மோட்டார் பம்புசெட்டுகள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அந்தநேரத்திலேகூட நான் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில், அந்தப் பகுதி மக்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டுமென்று, அதைச் சொல்வதற்காக சென்றிருந்த நேரத்தில், எங்களையெல்லாம் பெட்ரோல் குண்டு எறிந்து கொலை செய்கின்ற முயற்சிகள்கூட நடந்தது உண்டு. ஆனால், இப்போது அந்த நிலைகள் எல்லாம் இல்லை என்பதை உணர்ந்துதான் ஆண்டிப்பட்டியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் புரட்சித் தலைவி அவர்கள், இந்தத் தமிழகத்தின் முதல்வராக வர வேண்டும் என்ற நோக்கத்தோடு *(மேசையைத் தட்டும் ஒலி)* தங்களுடைய ஆதரவைத் தெரிவித்து, அத்தனை வாக்குகளையும் அளித்தார்கள்.

*முற்பகல் 11-30*

அதேபோல சாத்தான்குளத்திலே இடைத்தேர்தல் நடந்ததே, அந்தப் பகுதியிலே கருங்குளம் ஒன்றியத் தலைவராக இருந்த ஒருவர் அன்றைக்கு ஏமாற்றப்பட்டு, கூட்டு சேர்ந்து ஒரு வீட்டுக்குள்ளே வைத்து அரிவாளால் வெட்டி கொலை செய்யப்பட்டார் என்ற சம்பவம் எல்லாம் நடந்தது. அதையெல்லாம் நினைவுகூர்ந்துதான் இந்த சாத்தான்குளம் இடைத்தேர்தலில் அந்தக் கருங்குளம் பகுதியிலே இருந்தவர்கள், நாங்கள் எல்லாம் சென்று வாக்குகளைச் சேகரிக்கின்ற நேரத்தில், நீங்கள் வந்து கேட்கவே வேண்டாம்; எங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்து இருக்கிறது; இந்த ஆட்சி நல்லவிதத்திலே நிலைத்து நிற்கவேண்டும்; பல்லாண்டு இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் வாக்களிப்பதற்கு காத்துக் கொண்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு மாற்றப்பட்டு இருக்கின்றன என்று சொல்லும்போது உண்மையிலேயே நாங்கள் எல்லாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். அதோடு இங்கு சென்னை தலைநகரிலேயே சட்டத்தையும் கட்டுப்பாட்டையும் காக்க வேண்டிய சிறையிலேகூட மாபெரும் கலவரம்; அங்கே நமது தென்பகுதியைச் சேர்ந்த ஒரு நல்ல

அதிகாரிதான் ஜெயிலராக இருந்தார்; அவர் தீயிட்டு கொளுத்தப்பட்டார் என்ற செய்தி எல்லாம் இந்த சென்னை மாநகரம் கண்டது. அன்றைக்குக்கூட இந்த சட்டசபையிலே நான்கூட பேசினேன். சட்டம் ஒழுங்கை பாதுகாக்கின்ற ஒரு சிறைக்கூடத்திலேயே இப்படி சட்டம் ஒழுங்கு கெட்டு இருக்கிறதே என்பதையெல்லாம் சுட்டிக்காட்டினோம். அப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் இன்றைக்கு தவிர்க்கப்பட்டு இருக்கின்றன என்கின்ற நிலையை உணர்ந்து நாம் இந்த அரசைப் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைக்கு நமது கொள்கை விளக்கக் குறிப்பிலே சில வழிப்பறி திருட்டுகள் எல்லாம் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன; அவற்றை எல்லாம் தடுப்பதற்கு பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். சென்ற வாரம்கூட இங்கு நமது ராஜா அவர்கள்கூட காரைக்குடியிலே காவல் நிலையம் சிறப்பாக செயல்படுகிறது என்று சொன்னார். எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர் இன்றைக்கு சவூதி அரேபியாவிலே இருந்து கொண்டிருக்கிறார்; அவர் மனைவி மட்டும் காரைக்குடியிலே தனியாக இருக்கிறார். அவர் வீட்டு வாசலிலே வந்து நின்று கொண்டிருக்கிற நேரத்தில் 2 பேர் மோட்டார் பைக்கிலே பகல் நேரத்திலே வந்து அவருடைய கழுத்திலே இருந்த செயினை அறுத்துவிட்டு சென்று இருக்கிறார்கள். ஆனால், அங்குள்ள காவல் துறை, வழக்கே பதிவு செய்யவில்லை. அவர் கொடுத்த வழக்கு பதிவு செய்யப்படவில்லை. அங்கு நான் சென்று ஒரு பொறுப்புமிக்க உயர் அதிகாரியிடத்திலே இந்த மாதிரி நடந்துவிட்டது; அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லுங்கள் என்று சொன்னபிறகு, அந்த பொறுப்பு மிக்க அதிகாரி அங்கு இருக்கின்ற மாவட்ட கண்காணிப்பாளரிடத்திலே சொன்ன பிறகு, திரும்பப் போய் அவர் வீட்டிலே போய், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இது சம்பந்தமான வழக்கைத் தொடுப்பதற்கு நீங்கள் மனு கொடுங்கள் என்று வாங்கிச் சென்று இருக்கிறார்கள். அந்த அளவுக்கு நடந்த விவரத்தை அவர் காவல் நிலையத்திலே புகாராகக் கொடுத்த நேரத்திலே, அந்தப் புகாரை எடுத்துக்கொள்ளாமல், தவறவிட்டுவிட்டு, பின்னர் இங்கிருந்து தகவல் போனபிறகு அந்தக் காவல் நிலையத்திலே வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இப்படி சில பேர் மெத்தனப் போக்கிலே இருக்கின்றவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான்



முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

இந்த அரசு செய்திருக்கின்ற செயல்பாடுகளை, காவல் துறையிலே நிறைவு செய்திருக்கின்ற பல்வேறு சிறப்புகளை சொல்லிக்கொண்டே போனால் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு நேரம் இருக்காது என்ற நிலையிலே பல கோரிக்கைகள் இருந்தாலும் அவற்றில் சில கோரிக்கைகளை மட்டும் உங்களுடைய மேலான கவனத்திற்கு நான் வைப்பதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஏற்கெனவே 2001-லே இதே காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது நானே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். 1996-லே தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் 1100 பேரிலே 500 பேர் சட்டம் ஒழுங்கு பிரிவுக்கு எடுக்கப்பட்டுவிட்டார்கள். 600 உதவி ஆய்வாளர்கள் ஆயுதப்படையிலும், சிறப்புக் காவல் படையிலும் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ஏறக்குறைய இந்த 6, 7 ஆண்டுகளாக சட்டம் ஒழுங்கு பிரிவுக்கு செல்லவில்லை என்பதை எடுத்துச் சொல்கின்றபோது நிச்சயமாக அந்த கோரிக்கை கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களைக் கூப்பிட்டு ஆய்வு செய்கின்ற நேரத்திலே, அவர்கள் இந்தக் குறையைச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டும்கூட இன்னும் அவர்களுக்கு அந்தச் சட்டம் ஒழுங்கு பிரிவிலே, தாலுகா காவல் நிலையங்களிலே பணியாற்றுகின்ற நிலை ஏற்படுத்தித் தரப்படவில்லை என்பதைச் சொல்லி இருக்கிறார்கள்.

*முற்பகல் 11-35*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை இப்பிரச்சினை என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. காவலர்களை நான் சந்தித்து அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்றபோதுகூட, இது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதனை விரைவில் நிறைவேற்றியே தீர வேண்டுமென்று நான் ஏற்கெனவே அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். படிப்படியாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், நான் இந்த ஆண்டு முடிவதற்குள் பாக்கியுள்ள இவர்கள் அனைவரும் சட்டம் ஒழுங்கு பிரிவுக்கு மாற்றப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறேன். இந்த ஆண்டு இறுதிக்குள் நிச்சயமாக அவர்கள் மாற்றம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்த உதவி ஆய்வாளர்கள் சார்பிலே நான் என்னுடைய பாராட்டுகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் 1998ஆம் ஆண்டு சில ஆய்வாளர்கள் மருத்து தேர்ச்சிக்கு எல்லாம் சென்று இன்னும் அவர்களுக்குப் பணி கிடைக்கவில்லை என்கின்ற ஒரு நிலையைச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியிலே உசிலம்பட்டியிலே மகளிர் காவல் நிலையம் நீங்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறீர்கள். அதற்குரிய கட்டடங்கள் இல்லை. ஒரு மிகக் குறைவான இடத்திலே வாடகைக் கட்டடத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு மகளிர் காவல் நிலையக் கட்டடத்தை நகருக்கு உள்ளேயே - நிறைய இடம் இருக்கிறது - அதைக் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல், தாலுகா காவல் நிலையமும், பல ஆண்டுகளாக கட்டட வசதி இல்லாமல் உசிலம்பட்டியிலே நடந்து கொண்டிருக்கிறது. அதற்கும் நகரின் உள்ளேயே ஓர் இடத்தைத் தேர்வு செய்து கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

விக்கிரமங்கலத்திலே இருக்கிற காவல் நிலையம் ஏறத்தாழ 30 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அதற்கும், கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரை கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, தீயணைப்புத் துறையிலே, எங்களது உசிலம்பட்டியிலே தீயணைப்புத் துறை இயங்கி வந்தாலுங்கூட அதற்குரிய.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சந்தானம் அவர்கள், மற்றவற்றை எல்லாம் எழுதிக் கொடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** பேச்சை முடித்துக்கொள்கிறேன். தீயணைப்புத் துறைக்குப் போதுமான கட்டட வசதி இல்லையென்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சென்ற முறையும்கூட எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதற்குரிய கட்டட வசதி செய்து தரவேண்டும்.

அதேபோல் மதுரையிலே உயர்நீதிமன்றத்தினுடைய கிளை ஆரம்பிக்கின்ற நிலை இருக்கிறது. சென்னையிலே உயர்நீதிமன்றத்தில் தனியாக ஒரு தீயணைப்பு அலுவலகம் கட்டப்பட்டிருக்கிறது. அதுபோல்





மதுரையிலே இருக்கின்ற உயர்நீதிமன்ற வளாகத்திலும் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி உங்களுக்கு என்னுடைய உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு அமைதி ஆட்சி செலுத்துகிறதோ, அங்கு வளர்ச்சி வளர்பிறை ஆகிறது. தமிழகம், இந்தியாவின் முதல் நிலையை நோக்கி முன்னேறி வருகிறது என்றால், தமிழகத்தில் நிலவுகின்ற அமைதியும் அதற்கு ஒரு முக்கிய காரணம். கடந்த 2 ஆண்டு காலமாக தமிழகம், சாதிப் பூசலற்ற, மதக் கலவரம் இல்லாத மாநிலமாக விளங்கி வருகிறது. இது தற்செயல் விளைவு அல்ல. இது ஒரு சாதனை. நாம் நமது சிந்தனையாலும், செயலாலும் படைத்த சாதனை. இதற்கு எது காரணம்? சகல மக்களையும் ஒன்றாகக் கருதும் நமது மனப்பான்மை ஒரு காரணம். மக்கள், இந்த அரசின் மீது வைத்த மாபெரும் நம்பிக்கை ஒரு காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறையின் இடையறாத கண்காணிப்பு இன்னொரு காரணம்.

தமிழகக் காவல் துறை இந்தியாவிலேயே சிறந்த காவல் துறையாக விளங்குகிறது. இந்தப் பாரம்பரிய சிறப்பை இன்னும் உயர்த்துகின்ற உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது இந்த அரசு. காவல் துறையை வலிமைப்படுத்துவது, நவீனப்படுத்துவது, புதிய சாதனைகளைப் படைக்க ஊக்கப்படுத்துவது, இவற்றில் இந்த அரசு முனைப்போடு ஈடுபட்டு வருகிறது. காவலர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து, அவற்றை அவர்கள் கேட்கும் முன்னரே வழங்கி வருகிறது இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

தமிழகக் காவல் துறையை உலக அளவில் சிறந்த காவல் துறையாக ஆக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். ஒரு மாநிலத்தின் காவல் துறை உலகத்தில் சிறந்த காவல் துறையாக ஆக முடியுமா என்ற சந்தேகம் சிலருக்கு வரலாம். செய்ய முடியாத காரியம் என்று உலகத்தில் எதுவும் இல்லை. விடாமுயற்சி இருந்தால் எண்ணியதை நிச்சயமாக

அடையலாம் என்பதுதானே வள்ளுவப் பெருமானின் வாக்கு! (மேசையைத் தட்டும் ஒலி)

'அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'

என்பது ஆள்வினையுடைமை என்னும் அதிகாரத்தில் வரும் முதல் குறள். இந்த இலட்சியத்தை அடைய தமிழக அரசு எடுக்க இருக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைப்பற்றி நான் இந்த மாமன்றத்தில் இப்போது குறிப்பிட விரும்புகிறேன்.

2001-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் ஒன்றை இந்த மாமன்றத்தில் நான் கவனித்து வருகின்றேன். முக்கியமான விவாதங்களுக்கு நான் பதில் அளிக்கும்போது, உதாரணத்திற்கு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு நான் பதில் கூறும்போது, அல்லது காவல் துறை மீதான மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெறும் விவாதத்திற்கு நான் பதில் அளிக்கும்போது, இது போன்ற முக்கிய நிகழ்ச்சிகளின்போது எல்லாம், எதிர்க்கட்சிகள் குறிப்பாக தி.மு.க. இந்த அவையில் இருப்பதே இல்லை. இதை ஒரு வழக்கமாகவே அவர்கள் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த அவைக்கு வந்து, வாய்க்கு வந்தபடியெல்லாம் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிவிட்டு ஓடிப்போய் விடுகிறார்கள். ஆங்கிலத்தில் இதை Hit and Run என்று சொல்லுவார்கள். அதாவது சிலர், ஒரு காவல் துறையினர் வாகனம் செல்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், அந்தக் காவல் துறை வாகனத்தின்மீது ஒரு கல்லை எறிந்துவிட்டு, நடவடிக்கையை எதிர்கொள்ளத் துணிவு இல்லாமல், திராணி இல்லாமல், உடனே ஓடிவிடுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல தி.மு.க.வினர் இந்த அவைக்கு வந்து, வாய்க்கு வந்தபடியெல்லாம் அபாண்டமான பழிகளைச் சுமத்தி, குற்றச்சாட்டுகளை கூறி, அதற்கு எனது பதிலுரையில் நான் விளக்கம் கூறுவதற்கு முன்பாகவே, இந்த அவையை விட்டு ஓடிவிடுகிறார்கள். இது என்ன ஜனநாயக முறையில் அவர்கள் செயல்படுகிறார்கள், எந்த சித்தாந்தத்தை அவர்கள் கடைபிடிக்கிறார்கள் என்று புரியவில்லை.

நேற்று, இந்த அவையில் பேசும்போது, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் தெரிவித்த சில கருத்துகளுக்கு நான் பதில் கூறுகின்றபோது, 1999 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் அன்றைய தி.மு.க. அரசு, காவல் துறையினருக்கு சீருடைகூட சரியாக வழங்கவில்லை என்பதைத் தெரிவித்தேன். உறுப்பினர் அன்பழகன் அவர்கள், அவருடைய



தலைவர், முதலமைச்சராக இருந்தபோது காவல் துறையினருக்கு முழுக்கால் சட்டை வழங்கியதாக பெருமையாகக் கூறிக்கொண்டார். ஆனால், உண்மை என்னவென்றால், அரைக்கால் சட்டைகூட வழங்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, 1999-2000 ஆகிய ஆண்டுகளில் காவலர்களுக்கு வழங்க வேண்டிய பதக்கங்களைக்கூட வழங்கி அவர்களை கௌரவிக்கவில்லை என்பதை நேற்று நான் தெரிவித்தேன்.

அதுமட்டுமல்ல, தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்து, உள் துறைக்கும், காவல் துறைக்கும் பொறுப்பேற்றிருந்தபோது காவல் துறைக்கு அறிவிக்கப்பட்ட வாகனங்களைக்கூட வழங்கவில்லை. இந்தச் சட்டமன்றத்திலேயே காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றபோது, முதலமைச்சரே இத்தனை வாகனங்கள் காவல் துறைக்கு வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டு, பின்னர் அந்த வாகனங்கள் வழங்கப்படவில்லை, அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. காவல் துறைக்கு 434 வாகனங்கள் வாங்குவது தொடர்பாக தமிழக அரசு 18.72 கோடி ரூபாய் நிதியை 23-6-2000 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 650, உள் (காவல்-II) துறையின்கீழ் ஒதுக்கியது. ஆனால் வாகனங்களை வாங்குவதற்காக உடனடியாக நிதி அளிக்கப்படவில்லை.

முற்பகல் 11-45

தமிழக அரசு அரசாணை (நிலை) எண் 650 ஐ மாற்றம் செய்து, 27-12-2000 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1385 உள் (காவல் II) துறையின் கீழ், மின் நிதி நிறுவனத்திடமிருந்து வாடகைக் குத்தகை முறையில் வாங்கப்படுவதாக இருந்த 434 வாகனங்களை, காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் வழங்குவதற்கு ஆணையிட்டது. மேலும் 23-6-2000 அன்று, 18.72 கோடி ரூபாய் செலவில் 434 வாகனங்களை வாங்குவதற்கு அரசு ஆணையிட்டாலும் 2000-2001 ஆம் நிதி ஆண்டில் அப்போதைய அரசாங்கம் நிதி ஒதுக்காத காரணத்தால், இவ்வாகனங்களை வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டது. 27-2-2001ஆம் நாளிட்ட அரசாணை எண் 184 உள் (நவீனமயமாக்கல்) துறையின் கீழ் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 58 வாகனங்களை மட்டுமே வாங்குவதற்கு அப்போதைய அரசு நிதி ஒப்பளிப்பு அளித்தது. ஆனால் மீதமுள்ள வாகனங்களில் 368ஐ வாங்குவதற்காக, தற்போதைய அரசு,

அதாவது எனது தலைமையிலான அரசு, 20-6-2001ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 570-ன் கீழ் ஆணையிட்டதோடு, 2001-2002 ஆம் நிதியாண்டில் போதிய நிதியையும் ஒதுக்கியது. இவ்வாறு இந்த அரசு நிதி ஒப்பளிப்பு அளித்த பின்பே தேவையான வாகனங்கள் 2001-2002 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சந்தனக் கடத்தல் கொள்ளைக்காரன் வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் பிடிப்பதற்கு, எனது தலைமையிலான அரசு, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது. முழு மனதோடும், முனைப்போடும் தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தி.மு.க. தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலு, ஒரு கேள்வியை, 27-3-2003 அன்று எழுப்பி இருக்கிறார். அதே கேள்வியை நேற்று பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகனும் எழுப்பி இருக்கிறார்.

சில கேள்விகள், பதிலைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தில் கேட்கப்படும். சில கேள்விகள், சந்தேகத்தோடு கேட்கப்படும். சில கேள்விகள், எந்த நோக்கமும் இல்லாமல் கேட்கப்படும். சில கேள்விகள், எகத்தாளமாகக் கேட்கப்படும்.

திரு. தண்டராம்பட்டு வேலுவும், திரு. அன்பழகனும் கேட்டிருக்கும் கேள்வி, கடைநிலையில் உள்ள கேள்வி! அதாவது கடைசியாக நான் குறிப்பிட்ட வகையைச் சார்ந்த கேள்வி ஆகும். சிறப்பு அதிரடிப் படை என்ன செய்திருக்கிறது? அதற்கு எவ்வளவு செலவாகிறது? இதுதான் அவர்களுடைய கேள்வி!

அறிந்துகொள்ளும் நோக்கத்தில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டதோ? அல்லது எகத்தாளமாகக் கேட்கப்பட்டதோ? எப்படி இருந்தாலும், உரிய பதிலை, உணர வேண்டியவர்கள் உணருகின்ற முறையில், உணர்த்த வேண்டியது என் கடமை.

தமிழக சிறப்பு அதிரடிப் படைக்கு, புதிய உத்வேகமும், புதிய உற்சாகமும் அளிக்கும் வகையில், கடந்த ஜூன் 2001-ல், ஒரு புனரமைப்பு நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டது. தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படைக்கு, காவல் துறை கூடுதல் இயக்குநர் ஒருவர் தலைமையேற்று வழிநடத்தி வருகிறார். தற்போது, சிறப்பு அதிரடிப் படை அலுவலர்கள் 209 பேரும், மாவட்டத்திலிருந்து அயல் பணி மூலம்



368 பேரும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 2 கம்பெனிகளிலிருந்து 107 பேரும், ஆக மொத்தம், 684 பேர் சிறப்பு அதிரடிப் படையில் பணி புரிகிறார்கள். சிறப்பு அதிரடிப் படையின் புதிய கட்டமைப்பு பற்றிய விளக்கத்தை நான் கூறினேன்.

அடுத்து சிறப்பு அதிரடிப் படை ஆற்றி இருக்கும் பணிகள் சிலவற்றைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

சிறப்பு அதிரடிப்படை கர்நாடக மாநில வனப் பகுதியையும் உள்ளடக்கிய சுமார் 20 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பு உள்ள வனப் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தி வருகிறது. இந்த கடினமான பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இந்தப் படை புதுப் பொலிவுடன் செயல்பட, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விருப்பத்தின் அடிப்படையில் மட்டும் பணிபுரிய விரும்பும் ஆர்வலர்களின் உடற் தகுதி மற்றும் மன உறுதியை முக்கியமாகக் கவனத்தில் கொண்டு, சிறப்பு அதிரடிப் படைக்கான வீரர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். உளவுப் பிரிவு தகவல் என்பது, எந்த ஒரு நடவடிக்கையின் வெற்றிக்கும் அடிப்படையான ஆதாரம் என்பதால், சிறப்பு அதிரடிப் படையின் நுண்ணறிவுப் பிரிவு, பலப்படுத்தப்பட்டுள்ளது. வீரப்பன் கூட்டத்தினரின் நடவடிக்கைகள் குறித்து உளவுப் பிரிவு தரும் தகவலின் அடிப்படையிலேயே சிறப்பு அதிரடிப் படையின் தேடுதல் வேட்டை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

முற்பகல் 11-50

ஜூன் 2001-ல் சிறப்பு அதிரடிப் படை சீரமைக்கப்பட்ட பின்னர், வீரப்பனும் அவனது கூட்டாளிகளும், தமிழக வனப் பகுதிக்குள் தங்களது நடமாட்டத்தினை நிறுத்திக்கொண்டு, கர்நாடக வனப் பகுதிக்கு ஓடிப்போய்விட்டார்கள். இது, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, சிறப்பு அதிரடிப் படை புரிந்த சாதனை இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பா கடத்தல் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் கடத்தலில் தொடர்புடையவர்கள் பற்றிய விவரங்கள், தமிழக சிறப்பு அதிரடிப் படையினால்தான் கண்டுபிடிக்கப்பட்டன. இதன்மூலம் வீரப்பன் கூட்டத்தினருடன் தொடர்பு கொண்டுள்ள, தமிழகம் மற்றும் கர்நாடக நபர்கள் பற்றிய விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது இந்த ஆட்சியில், சிறப்பு அதிரடிப் படை நிகழ்த்திய சாதனை இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

சுலபமாகச் சென்று அடைய முடியாத, மலைக் கிராமங்களில்கூட, மருத்துவ நிபுணர் குழுவை அழைத்துச் சென்று, இலவச மருத்துவ முகாம் நடத்துதல், கல்வித் தரத்தை மேம்படுத்த புதிய ஆசிரியர்களை நியமித்தல், சாலைகளே இல்லாத மலைவாழ் கிராமங்களை இணைக்க சாலைகள் அமைத்தல், மின்வசதி செய்துதர முடியாத தொலைதூர மலைக் கிராமங்களுக்கும், சூரிய ஒளி மூலம் விளக்கு வசதி செய்து தருதல், இரண்டாம் நிலைக் காவலர்களாகத் தேர்வு செய்யப்பட தகுதியான 221 மலைவாழ் இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களுடைய உடற் திறன் தகுதி மற்றும் தேர்வு எழுதும் திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல், வீரப்பனால் பாதிக்கப்பட்ட மலைக் கிராமங்களை மாவட்ட நிர்வாகம் தத்தெடுத்து அங்கு வறுமை நிலையை நீக்க நலப் பணிகளை மேற்கொள்ளுதல், குடிநீர் வசதி இல்லாத வனப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தருதல், இவையெல்லாம் சிறப்பு அதிரடிப் படையின் செயலாக்கப் பகுதிகளில் நடைபெற்று வரும் நலப் பணிகள் ஆகும். இவற்றால் பழங்குடி மக்கள் அரசுக்கு சாதகமான நீரோட்டத்திற்கு அதிக அளவில் திருப்பப்பட்டதும், வீரப்பனுக்கு தமிழகப் பகுதியில் உள்ள பிடிப்பு குறைந்ததும், அதனால் கர்நாடக வனப் பகுதியில் மட்டுமே வசிக்கும் நிலைக்கு வீரப்பன் தள்ளப்பட்டுள்ளதும் சிறப்பு அதிரடிப் படை செய்த சாதனை இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு பொறுப்பேற்ற பின்தானே தமிழக சிறப்பு அதிரடிப் படைக்கும், கர்நாடக அதிரடிப் படைக்கும் சுமுகமான அணுகுமுறை ஏற்பட்டது?

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு வீரப்பனின் ஆட்கள் பிடிபட்டு இருக்கிறார்கள்; வீரப்பனோடு தொடர்பு வைத்த தீவிரவாதிகள் பிடிபட்டு இருக்கிறார்கள்; அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. இவையெல்லாம் சாதனைகள் இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

இவை மட்டுமல்லாமல், கர்நாடக சிறப்பு இலக்கு படையுடன் இணைந்து, தமிழக சிறப்பு அதிரடிப் படை தீவிரமாக தேடுதல் வேட்டையை நடத்தி வருகிறது. சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த காவல் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையிலான அதிரடிப் படைக்



குழு, கோயம்புத்தூர் சரக காவல் துறை துணைத் தலைவர் அவர்களுக்கு உதவியாக, அல் உம்மா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த இமாம் அலியையும் அவனது கூட்டாளிகளையும் கைது செய்ய அனுப்பப்பட்டது. 29-9-2002 அன்று, பெங்களூர் நகரம், எம்.எஸ்.ஆர். நகரில் நடைபெற்ற அதிரடி நடவடிக்கையில் இமாம் அலி, அவனுடைய கூட்டாளி சபியுல்லா, யாஸ்மின் ஆகிய தீவிரவாதிகள் சுடப்பட்டு இறந்தார்கள். சிறப்பு அதிரடிப் படையினர் 13 பேர் காயம் அடைந்தார்கள். இந்த வீர சாகசச் செயலை நிகழ்த்தி தீவிரவாதிகளை ஒடுக்குவதில் ஒரு சாதனையைப் படைத்தது இந்த அரசின் வழிகாட்டுதலில் இயங்கும் சிறப்பு அதிரடிப் படை அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)

சுருங்கச் சொன்னால், வீரப்பன் கும்பல் தமிழகப் பகுதியில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டு, மீண்டும் தமிழகப் பகுதிக்குள் நுழையாத வண்ணம் தடுக்கப்பட்டிருப்பது, தமிழக சிறப்பு அதிரடிப் படையின் தீரத்திற்கும், அணுகுமுறைக்கும் கிடைத்திருக்கும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு அதிரடிப் படை தொடர்பான செலவினம் பற்றிய விவரங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1999-2000-ல் 2 கோடியே 27 இலட்சம் ரூபாய்;

2000-2001-ல் 3 கோடியே 36 இலட்சம் ரூபாய்;

2001-2002-ல் 9 கோடியே 47 இலட்சம் ரூபாய்;

2002-2003-ல் 7 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

கூடுதல் பணம் செலவிடப்பட்டு இருக்கிறது. ஏனென்றால், கூடுதல் ஈடுபாடு காட்டப்பட்டிருக்கிறது; கூடுதல் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது; கூடுதல் பலன்கள் விளைந்திருக்கின்றன. வீரப்பனை பிடிப்பது ஒன்றுதான் பாக்கி. அதையும் விரைவில் செய்து முடிப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்தில் இன்னொரு உண்மை குறித்தும் இந்த அவையின் கவனத்தை ஈர்ப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

கன்னட நடிகர் திரு. ராஜ்குமார் கடத்தப்பட்டார். கடத்தியவன் வீரப்பன். கர்நாடக முன்னாள் அமைச்சர் திரு. நாகப்பா கடத்தப்பட்டார். கடத்தியவன் வீரப்பன். ஆனால் இந்த இரண்டு சம்பவங்களுக்கும் இடையே, ஏகப்பட்ட வித்தியாசம் உள்ளது.

*முற்பகல் 11-55*

திரு. ராஜ்குமார் கடத்தப்பட்டது தமிழ்நாட்டில். திரு. நாகப்பா கடத்தப்பட்டது கர்நாடகத்தில். அப்போது தமிழ்நாட்டில் வீரப்பனால் கடத்த முடிந்தது. அது, தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த தமிழ்நாடு; ஆகையால் முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது வீரப்பனால் தமிழ்நாட்டில் கடத்த முடியவில்லை. இது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு; ஆகையால் முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கருணாநிதி ஆட்சி புரிந்தபோது தமிழ்நாட்டில் வீரப்பன் கடத்துவது சாத்தியம். எனது ஆட்சி நடைபெறும்போது, தமிழ்நாட்டில் வீரப்பன் கடத்துவது அசாத்தியம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது சாத்தியம், இப்போது அசாத்தியம், இதுதானே சத்தியம்? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இன்றைக்கு ஏளனப் புன்னகை புரிகின்றவர்களுக்கும், எகத்தாள கேள்வி கேட்கின்றவர்களுக்கும், நான் சொல்லிக்கொள்கிற பதில் இதுதான். எப்படியும் பிடித்தே தீருவது என்ற உறுதிப்பாட்டோடு, எடுத்த லட்சியத்தில் இம்மியும் பிசகாமல், ஏறுநடை போட்டு வருகிறோம் நாங்கள். ஆனால், எங்களுக்கு முன் ஐந்தாண்டுக் காலம் ஆட்சி நடத்திய தி.மு.க.வினர் என்ன செய்தார்கள்? வீரப்பனோடு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இவர்களா எங்களைப் பார்த்து எகத்தாளம் பேசுவது? இவர்கள் யார்? குப்பைமீது ஏறி, கோழி பிடிக்க முடியாதவர்கள்! கோழி பிடிப்பதாக, பாவலா காட்டிக் கொண்டிருந்தவர்கள்! "கோழியே, கோழியே நீ முட்டை கொடுத்தால் போதும், நிச்சயம் உன்னை விட்டு விடுகிறேன்" என்று திருட்டுக் கோழியிடம் திரை மறைவு ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இவர்களா, என்ன செய்தீர்கள் என்று ஏளனத் தொனியில், எங்களைப் பார்த்துக் கேள்வி கேட்பது? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



இந்த வீராதி வீரர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், எங்கள் நோக்கம் தெளிவானது, எங்கள் திட்டம் சிறப்பானது, எனவே வீரப்பனை பிடிப்பது உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. தண்டராம்பட்டு வேலுவின் கேள்விக்கும், தியாகராய நகர் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் கேள்விக்கும் தக்க பதிலை நான் சொல்லிவிட்டேன். இப்போது கேள்வி கேட்க வேண்டியது, என்னுடைய முறை.

கர்நாடக முன்னாள் டி.ஜி.பி. திரு. சி. தினகர், தனது Veerappan's Prize Catch: Rajkumar என்னும் புத்தகத்தில் கூறியுள்ளபடி, கன்னட நடிகர் ராஜ்குமாரின் விடுதலைக்காக, தி.மு.க. தலைவர், அன்றைய முதல்வர் திரு. கருணாநிதியிடம், அவருடைய வீட்டில் கொடுக்கப்பட்ட பிணைத் தொகை எவ்வளவு? இதில், திரு. கருணாநிதி வைத்துக் கொண்டது எவ்வளவு? வீரப்பனுக்கு வழங்கியது எவ்வளவு? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

"வீட்டுக்காரனே, கொள்ளைக்காரனுக்குக் கூட்டுக்காரனானால் விடிய விடிய திருடலாம்" என்று ஒரு பழமொழி உள்ளதே, அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு நீங்கள் பேசியது பேரம்! இன்றைக்கு நீங்கள் பேசுவது வீரம்! (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி இருக்கிறது நியாயம்? (மேசையைத் தட்டும் ஒலி)

வீரப்பனை பிடிக்க எவ்வளவு செலவு செய்தீர்கள் என்று கேட்டாரே தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலு? அதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். வீரப்பனுக்காக அன்றைய முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதியிடம் கொடுக்கப்பட்ட பிணைப் பணத்தில், திரு. கருணாநிதி எவ்வளவு வைத்துக்கொண்டார்? வீரப்பனுக்கு எவ்வளவு கொடுத்தார்? இதற்கு திரு. தண்டராம்பட்டு வேலு பதில் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

கர்நாடகத்தின் முன்னாள் காவல் துறை இயக்குநர், திரு. சி. தினகர் எழுதிய, Veerappan's Prize Catch: Rajkumar என்ற புத்தகம், கன்னட நடிகர் திரு. ராஜ்குமாரைக் கடத்தியபோது என்ன நடைபெற்றது என்பதை விளக்கும் தகவல் நூல் மட்டுமல்ல. எங்கோ கர்நாடகத்தில் எழுதப்பட்டு, இங்கே தமிழகத்தில் உள்ள, சிலபேர்களின் முகமூடிகளை முற்றும் கிழித்தெறிய வந்ததுதான் இந்தப் புத்தகம். (மேசையைத் தட்டும் ஒலி) உச்சபட்சப் பதவியில் உட்கார்ந்திருந்த திரு. கருணாநிதி, தூதர்கள் என்று அழைக்கப்பட்ட பேர்வழிகளின் துணையோடு, என்னென்ன குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிய புத்தகம்தான் இந்தப் புத்தகம். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி மீது இது தொடர்பாக, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் விசாரிக்க நான் உத்தரவிட்டிருக்கிறேன். இந்தப் புலனாய்வு விரைந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவில் உண்மை ஊருக்குத் தெரிய வரும்! அப்போது திரு. கருணாநிதியின் உத்தம வேஷம் கலைக்கப்படும்! (மேசையைத் தட்டும் ஒலி)

*நண்பகல் 12-00*

2001-2002 ஆம் ஆண்டில் நான் இதே மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்றபோது, அப்போது நான் வெளியிட்ட புதிய அறிவிப்புகளின் எண்ணிக்கை 50. அவற்றில் ஆணைகள் வெளியிடப்பட்டவை 49. ஆணை வெளியிடப்பட வேண்டியது 1. கொள்கை விளக்கக் குறிப்பின் செயற்குறிப்பு அன்றைக்கு 8. ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவை 8.

2002-2003 ஆம் ஆண்டில் இதே மானியக் கோரிக்கையின்மீது நான் பேசியபோது நான் வெளியிட்ட புதிய அறிவிப்புகளின் எண்ணிக்கை 34. ஆணைகள் வெளியிடப்பட்டவை 30. ஆணைகள் வெளியிடப்பட வேண்டியவை 4. கொள்கை விளக்கக் குறிப்பின் செயற்குறிப்பு 4. ஆணை பிறப்பிக்கப்பட்டது 1, ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டியவை 3. இந்த மீதமுள்ளவை மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவிலேயே அமல்படுத்தப்படும்.



இப்போது இந்த ஆண்டிற்கான, 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை இந்த அவைக்கு வெளியிட விரும்புகிறேன்.

**(1) அனைத்து காவல் உட்கோட்டங்களிலும், 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டத்தில், மூன்றாவது மற்றும் இறுதி கட்டமாக 40 கூடுதல் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஆரம்பித்தல்**

காவல் துறையின் வரலாற்றில் ஒரு புதிய தொடக்கமாகவும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதில் ஒரு புதிய குறிப்பிடத் தக்க அம்சமாகவும், அனைத்து மகளிர் காவல் நிலையத்தை முதன்முதலாக 1992ஆம் ஆண்டில் சென்னை, ஆயிரம் விளக்கு பகுதியில் நான் தொடங்கி வைத்தேன். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குக் கிடைத்த வெற்றி, பாராட்டு ஆகியவற்றின் ஊக்கத்தினால் அதிக எண்ணிக்கையிலான அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. இதன் எண்ணிக்கை 1996 ஆம் ஆண்டுக்குள் 58 ஆக அதிகரித்தது. ஆனால், அடுத்து அமைந்த தி.மு.க. ஆட்சியில் புதியதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் எதுவும் தொடங்கப்படவில்லை என்பதோடு, ஏற்கெனவே இருந்த எல்லா அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் சீர்கேட்டுக்கு ஆளாகி, எந்த நோக்கங்களுக்காக அவை தொடங்கப்பட்டனவோ அந்த சீரிய நோக்கங்களைச் செயல்படுத்த இயலாத நிலையில் அவை இருந்தன.

மீண்டும் ஆட்சிப் பொறுப்பை 2001 மே மாதத்தில் நான் ஏற்றுக்கொண்ட பிறகு, பெண்கள் நலன் காக்க புதிய உத்வேகத்துடன் செயல்படும் வகையில் மேலும் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்க உத்தரவிட்டேன். அதுமட்டுமல்லாமல், பெண்களின் அச்சத்தைப் போக்கி அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் களைவதற்காக, தமிழகத்தில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களிலும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்த நான் ஆணையிட்டேன். அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களில் ஏற்கெனவே மகளிர் காவல் நிலையங்களைக் கொண்டுள்ள 58 உட்கோட்டங்கள் நீங்கலாக மீதமுள்ள காவல் உட்கோட்டங்களிலும், ஓர் உட்கோட்டத்திற்கு ஒன்று வீதம் படிப்படியாக 3 ஆண்டுகளில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறப்பதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2001-2002 ஆம் ஆண்டில் 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 2002-2003 ஆம் ஆண்டில் 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறக்க உத்தரவிடப்பட்டு, 109-வது காவல் நிலையத்தை ஆண்டிப்பட்டியில் திறந்துவைத்து, அண்மையில் 27-1-2003 அன்று ஒரே நேரத்தில் தியாகராயர்நகரில் ஒரு நிலையமும், தமிழகத்தில் பிற 36 உட்கோட்டங்களில் 36 நிலையங்களும், ஆக 37 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை திறந்து வைத்தேன். சாத்தான்குளத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்ததால் தூத்துக்குடி மாவட்டத்தில் 2 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் பின்னர் திறந்து வைக்கப்பட்டன.

மூன்றாவது மற்றும் நிறைவு கட்டமாக இந்த ஆண்டு சுமார் 7 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படத் துவங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால் தமிழகத்திலுள்ள அனைத்து காவல் துறை உட்கோட்டங்களிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படும் என்ற நிலை எட்டப்படும் என்பதோடு, காவல் துறை வரலாற்றில் இந்தியா முழுமைக்குமான ஒரு சாதனையாக இந்த முயற்சி அமைகிறது என்பதையும் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**(2) அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும், தமிழ்நாடு மகளிர் சிறப்புக் காவல் படையிலும் கூடுதலாக 30 குழந்தைகள் நலக் காப்பகங்கள் ஆரம்பித்தல்**

அல்லும் பகலும், ஒரு நாளில் 24 மணி நேரமும் கடமையாற்ற வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் காவல் துறையினர். அவர்களது குறைகளை நேரில் கேட்டறிவதற்காக சென்னை, தலைமைச் செயலகத்திற்கே அவர்களை வரவழைத்து "காவலர் குறை தீர்க்கும்" கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தேன். இந்தியாவிலேயே இதுவரை எந்த முதல்வரும் செய்திராத 'சாதனை என்று அதனைப் பலரும் பாராட்டுகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு குறை



கேட்டபோது, தங்கள் சிறிய குழந்தைகளை வீட்டிலேயே விட்டு விட்டுப் பணிக்குச் செல்வதால் ஏற்படுகின்ற துன்பத்தைப் பற்றி பெண் காவலர்கள் என்னிடம் முறையிட்டார்கள். மக்களுக்குப் பணியாற்றுகின்ற கடமையில் எப்போதும் இருக்கின்ற காவலர்கள், குறிப்பாக, மகளிர் காவலர்கள் துன்பப்படக்கூடாது என்பதற்காக அவர்களுடைய குழந்தைகளைப் பேணுவதற்காக "காவலர் குழந்தைகள் நலக் காப்பகம்" என்னும் சிறந்த திட்டத்தைத் தொடங்க உத்தரவிட்டேன்.

*பிற்பகல் 12-05*

இந்தக் குழந்தைகள் நலக் காப்பகங்களில் பெண் காவலர்கள் தங்களுடைய குழந்தைகளை நம்பிக்கையோடு விட்டு விட்டு, நாட்டுக்குத் தாங்கள் செய்கின்ற கடமையை நிம்மதியாகச் செய்யலாம். இந்தக் காப்பகங்களில் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்களும், கல்வி புகட்டும் எளிய சாதனங்களும் வைக்கப்பட்டிருக்கும்.

இந்தக் காப்பகங்களில் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஆரோக்கியமான உணவு வகை வழங்கப்படும். இதற்குரிய செலவினத்தில் 50 சதவிகிதத் தொகை குழந்தைகளின் பெற்றோரிடமிருந்து வசூலிக்கப்படும். இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை உடனுக்குடன் அரசு கணக்கில் தவறாமல் வரவு வைக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துள்ளேன்.

காப்பகங்களில் குழந்தைகளைப் பராமரிக்கும் 'ஆயா' வேலையில் காவல் துறை குடும்பங்களைச் சார்ந்த மகளிரே ஈடுபடுத்தப்படுவார்கள். கருணை அடிப்படையில் பணியில் நியமிக்கப்படுவதற்கு என்று காத்திருக்கும் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களிடையே இருந்து இவர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1500 தொகுப்பூதியமாக வழங்கப்படும். ஒரு பெண் உதவி ஆய்வாளர் இந்தக் குழந்தைகள் நலக் காப்பகத்தின் பொறுப்பாளராக செயல்பட்டு அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிடுவார்.

இந்தத் திட்டத்தின்படி, சென்னை புதுப்பேட்டையில் உள்ள ஆயுதப்படை வளாகத்தில் அமைந்துள்ள சென்னை மாநகரக் காவலர்

குழந்தைகள் நலக் காப்பகத்தை 27-01-2003 அன்று நடைபெற்ற விழாவில் திறந்து வைத்தேன். மேலும், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, சேலம், கோவை ஆகிய 5 மாநகரக் காவலர் குழந்தைகள் நலக் காப்பகங்களையும் அதே விழாவில் திறந்து வைத்தேன்.

இதன் தொடர்ச்சியாக 2003-2004 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் உள்ள 29 காவல் மாவட்டங்களிலும் பெண்கள் சிறப்புக் காவல் படையிலும் ஆக மொத்தம் 30 குழந்தைகள் நலக் காப்பகங்கள் 47.12 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும் என அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**(3) 25 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்**

தற்போதுள்ள 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்களில், 87 அரசுக்குச் சொந்தமான கட்டடங்களிலும், 61 தனியார் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. இதில் ஒன்பது காவல் நிலையங்கள் மட்டுமே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 27 புதிய காவல் நிலையங்களுக்கான கட்டுமானப் பணியும் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2003-2004 ஆம் ஆண்டில் மேலும் 25 புதிய கட்டடங்கள் மொத்தம் 3 கோடி ரூபாய் செலவில், அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்காகக் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(4) 18 நடமாடும் ஆலோசனை மையங்கள் செயல்படுவதற்கு வாகனங்கள் வழங்குதல்**

பெண்கள் மற்றும் குழந்தைகள் தொலைபேசியில் புகார் அளித்த உடன், மகளிர் ஆலோசனைக் குழு விரைந்து சென்று நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் நடமாடும் ஆலோசனைக் குழுவிற்கான முதல் வாகனத்தை, அதாவது, Mobile Counselling Unit-ஐ 27-01-2003 அன்று சென்னை, தியாகராய நகர், அனைத்து மகளிர் காவல் நிலையத் திறப்பு விழாவில் காஞ்சிபுரம்



மாவட்டக் காவல் துறையிடம் வழங்கினேன். கடந்த ஆண்டு மேலும் 16 வாகனங்கள் நடமாடும் ஆலோசனைக் குழுவிற்காக வழங்கப்பட்டன. இந்த நடமாடும் ஆலோசனைக் குழு வாகனத்தில் TV/VCD/VCR/Battery போன்ற வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இருள்சூழ்ந்த இடத்திலும்கூட இந்த வாகனத்தில் உள்ள கருவிகள் மூலம் வெளிச்சத்தை வழங்க முடியும்.

இந்த ஆண்டு இரண்டாவது மற்றும் நிறைவுக் கட்டமாக இந்த அரசு 18 புதிய நடமாடும் ஆலோசனை மையங்களை ஏற்படுத்தும். இதற்கான மொத்தச் செலவு சுமார் 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் ஆகும். இதன் மூலம் இந்த ஆண்டு முடிவிலேயே அனைத்து மாவட்டங்களிலும், ஆணையரகங்களிலும் நடமாடும் ஆலோசனை மையம் இயங்கத் துவங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(5) மாநிலம் முழுவதும் பெண் காவல் பணியாளர்களுக்கு 114 ஓய்வறைகள் கட்டுதல்**

தமிழ்நாட்டில் பல்வேறு காவல் நிலையங்களில் ஓய்வு அறை, குளியல் மற்றும் கழிவு அறை வசதிகள் பெண் காவலர்களுக்கு இல்லை என்பதால், நான் பதவி ஏற்ற பிறகு, 570 இடங்களில் பெண் காவலர்களுக்காக இத்தகைய வசதிகளை ஏற்படுத்த மூன்று கட்ட செயல்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, அதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஏற்கெனவே சுமார் 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், 456 இடங்களில் குளியல் மற்றும் கழிவு அறைகள் வசதி கொண்ட ஓய்வு அறைகள் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இதன் நிறைவுப் பகுதியாக, 2003-2004 ஆம் ஆண்டு சுமார் 1 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் பெண் காவலர்களுக்கென ஆயுதப்படைப் பிரிவுகளில் 53-ம், மாவட்ட காவல் அலுவலகங்கள் மற்றும் ஆணையரகங்களில் 35-ம், காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் 5-ம், இதர இடங்களில் 21-ம், ஆக மொத்தம் 114 அலுவலகங்களில் அடிப்படை வசதிகள் உள்ள ஓய்வு அறைகள் அமைக்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

**6. சென்னைக்கு வரும் பெண் காவல் பணியாளர்களுக்காக சென்னை நகரில் விருந்தினர் ஓய்வு அறைகள் கட்டுதல்**

தமிழ்நாட்டில் 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி 287 காவல் நிலையங்களில் ஒரு பெண் உதவி ஆய்வாளரும், இரண்டு இரண்டாம் நிலைப் பெண் காவலர்களும் நியமனம் செய்யப்பட்டார்கள். இவர்களில் மாவட்டங்களில் பணியாற்றும் பலர், நீதிமன்றப் பணிகள் மற்றும் பிற பணிகளுக்காக வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து சில நாட்கள் தங்கிப் பணியாற்ற வேண்டியுள்ளது. இவர்கள் தங்குவதற்கான தனிப்பட்ட வசதிகள் தற்போது இல்லை. இந்நிலையை மாற்றி வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வரும் பெண் காவல் பணியாளர்கள் தங்குவதற்காக சென்னையில் வால்டாக்ஸ் சாலையின் அருகே அமைந்துள்ள ஐசக் தெருவில் காவல் துறைக்குச் சொந்தமான நிலத்தில் 62.29 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக ஒரு விருந்தினர் இல்லம் கட்டப்படும். இதில் தனி அறைகளும், ஓய்வு அறை வசதியும் செய்து கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(7) சென்னை நகரத்துக்குப் பணி நிமித்தமாக வரும் காவல் பணியாளர்களுக்கு விருந்தினர் ஓய்வு அறைகள் கட்டுதல்**

வெளி மாவட்டங்களிலிருந்து சென்னை நகருக்கு நீதிமன்றப் பணி மற்றும் இதர அலுவலகப் பணிநிமித்தமாக வரும் காவல் பணியாளர்களுக்கு தங்குவதற்காக விருந்தினர் ஓய்வு அறைகள் ஏதும் தற்போது இல்லை. அவர்களின் நலனை கருத்தில் கொண்டு 67.36 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில் உள்ள ஜாபர் சாரங் தெருவில் காவல் பணியாளர்கள் தங்குவதற்காக விருந்தினர் ஓய்வு அறைகள் கட்டப்படுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**(8) காவல் துறையில் விளையாட்டு வீரர்களை இனம் கண்டு தேர்வு செய்வதற்கு முனைப்பான திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துதல்**

காவலர் என்ற சொல்லுக்கு சட்டத்தின் பாதுகாவலன் மற்றும் மக்களின் பாதுகாவலன் என்று பொருள் கொள்ளலாம். பாதுகாவலன்



என்னும் பொறுப்பினை ஏற்க, வலிமையற்றோருக்கு இடமில்லை; முயற்சி அற்றோருக்கு இடமில்லை; முயற்சியைக் கைவிட்டுவிடுவோருக்கு இடமில்லை. இதன் அடிப்படையில், மக்களையும் சமுதாயத்தையும் பாதுகாக்கும் பணியினைச் சிறப்பாக ஆற்றுவதில் காவல் துறையினரின் மனவுறுதியினை வலுப்படுத்துவதற்கு விளையாட்டுகள் முக்கியப் பங்காற்றும் என நான் உறுதியாக நம்புகிறேன். விளையாட்டுகள் குணநலன்களை உருவாக்குவதில்லை. மாறாக அவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன என்று கூறப்படுகிறது.

இக்கூற்றின்படியே ஒருமுகஅர்ப்பணிப்பு, மன உறுதிப்பாடு, கூட்டுக் குழுவாக செயல்படும் குணநலன்கள் ஆகியவற்றை விளையாட்டு செம்மைப்படுத்தி வளர்க்கிறது. தனி மரம் தோப்பாகாது என்ற பழமொழியை நாம் மறக்கலாகாது. இக்காரணத்திற்காக தமிழக காவல் துறையில் 10 சதவீத இட ஒதுக்கீட்டினை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கென ஒதுக்கி எனது அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. இது, மேன்மேலும் விளையாட்டு வீரர்கள் அதிக எண்ணிக்கையில் காவல் துறையில் சேர வழிவகுக்கும்.

விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுத் திறன் பெற்றவர்களை அடையாளம் கண்டு, தெரிவு செய்து அவர்களைக் காவல் துறையில் பணியமர்த்தும் திட்டமொன்று இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு சிறப்புத் தேர்வுக் குழு ஒன்று மாநில அளவில் காவல் துறை தலைமை இயக்குநர் தலைமையில் அமைக்கப்படும். இதில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத் தலைவரும், உறுப்பினர்-செயலரும், மற்றும் காவல் துறை தலைமை இயக்குநர் தெரிவு செய்யும் உறுப்பினர் ஒருவரும் இருப்பார்கள். 10 சதவீத இட ஒதுக்கீட்டிற்கான விளையாட்டு வீரர்களை தேர்வு செய்யும் பணியினை இச்சிறப்புக் குழு மேற்கொள்ளும்.

இதுமட்டுமின்றி விளையாட்டுத் திறன் உள்ளவர்களைக் கண்டறிந்து தேர்வு செய்து பரிந்துரை செய்ய ஆயுதப்படை காவல் துறை துணைத் தலைவர் மற்றும் இரண்டு அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று காவல் துறைத் தலைவர், செயலாக்கம் அவர்கள் தலைமையில் அமைக்கப்படும். இந்தத் திறமைகளை இனம் காணும் குழு தனது பரிந்துரைகளை மாநில அளவிலான சிறப்புத் தேர்வுக் குழுவினரிடம் அளிக்கும். விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி இனி காவல் துறை தலைமை இயக்குநர் தலைமையில் இயங்கும் சிறப்புத் தேர்வுக் குழுவால் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

**(9) காவல் துறையில் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்க 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் விளையாட்டு மேம்பாட்டு நிதி ஒன்றினை ஏற்படுத்துதல்**

பல்வேறு விளையாட்டுகளிலும் காவல் துறை வீரர்கள் சிறந்து விளங்கிட வேண்டுமென்றால், அவர்களுக்கு அதற்கான சிறப்புப் பயிற்சிகள் மற்றும் பெருவாரியான தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வாய்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், அவர்களுக்குத் தேவையான பயிற்சி உபகரணங்களை வழங்குவதும் அவசியமானது. 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில், இந்த ஆண்டு இதற்கென விளையாட்டு மேம்பாட்டு நிதி அமைக்கப்படும். இது ஏற்கெனவே வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்களுக்கும் கூடுதலான செலவினமாகக் கருதப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(10) அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டுக்கென வசதிகள் ஏற்படுத்தித் தருதல்.**

தமிழ்நாடு அதன் காவல் துறையினைக் குறித்துப் பெருமிதம் கொள்கிறது. தமிழகக் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளும், பணியாளர்களும் எப்போதும் கடுஞ்சூழல்களிலும் முயற்சி மேற்கொள்பவர்களாகவும், கடமையில் கண்ணும் கருத்துமாக, அக்கறை உடையவர்களாகவும், தொழில் திறனும், அதீத வீரமும் உடையவர்களாகவும் திகழ்ந்து வருகின்றனர்.

நமது காவல் துறையில் விளையாட்டுகளுக்கும் மற்றும் போட்டிகளுக்கும் பெருமைக்குரிய இடம் எப்போதும் தரப்பட்டுள்ளது. நமது காவல் பணியாளர்கள் ஒவ்வொரு அனைத்திந்திய காவலர் விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி கண்டு வந்துள்ளனர். ஆண்டுதோறும் நடக்கும் தமிழ்நாடு மாநில காவல்துறை விளையாட்டுப் போட்டிகளில் நமது காவல் துறையினரின் சிறந்த விளையாட்டுத் திறன்கள் வெளிப்படுகின்றன.

அனைத்து காவல் துறையினருக்கும், அடிப்படை உடற்திறனை மேம்படுத்தவும், குறிப்பிடப்பட்ட விளையாட்டுப் பயிற்சிக்கெனவும், தக்க வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். இத்திட்டம் உடற்பயிற்சி மையம்,



கைப்பந்து, கூடைப்பந்து விளையாட்டு அரங்குகள் அமைத்துத் தருவதையும் உள்ளடக்கியதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(11) பொதுமக்கள், காவலர் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டிகள்**

பொதுமக்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே நல்லுறவினை வளர்ப்பதிலும், சமுதாயக் காவல் பணியினை மேம்படுத்துவதிலும் விளையாட்டுப் போட்டிகள் பேருதவி புரிகின்றன. அங்கொன்றும் இங்கொன்றுமாக காவல்துறை அலுவலர்களின் தனிப்பட்ட முயற்சியால் இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெறுகின்றன. இதை இனி முறையாக மேற்கொள்ள, இந்த வருடம் முதல், மாவட்டந்தோறும், மாவட்ட விளையாட்டு அலுவலருடன் இணைந்து, காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆணையர்கள், விளையாட்டுப் போட்டிகளை நடத்துவார்கள். இதற்கென அரசினால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்டுதோறும் ரூபாய் 50,000 வீதம் 17.50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(12) நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துச் செயலாக்கத்தினை மேம்படுத்த, நெடுஞ்சாலைச் சுற்றுக்காவல், போக்குவரத்து உதவி மையங்கள் மற்றும் அவசர விபத்து நிவாரண மையங்கள் ஆகியவற்றைப் புதிய செயல்பாட்டுத் திட்டத்தின்கீழ் மறுசீரமைத்தல்**

நெடுஞ்சாலைகளில் நிகழக்கூடிய குற்றங்களைத் தடுக்கவும், விபத்துகளின்போது உடனடி நிவாரணம் அளிக்கவும் மற்றும் சாலை விபத்துகளின் எண்ணிக்கையினைப் பெருமளவில் குறைப்பதன் பொருட்டும், நெடுஞ்சாலைச் சுற்றுக்காவல் அமைப்புகளும் மற்றும் போக்குவரத்து உதவி மையங்களும் இச்சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒன்றிணைக்கப்படும். அதுமட்டுமின்றி, சாலை விபத்துகளில் காயமடைந்தவர்களுக்கு உடனடியாக உதவி புரிய, இந்த அமைப்புகள் தற்போது தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வரும் விபத்து நிவாரண மையங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட வழிவகை செய்யப்படும்.

ஒவ்வொரு காவல் துறை துணைத் தலைவர் அலுவலகத்திலும் மற்றும் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திலும் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட கண்காணிப்புக் குழுக்கள் (Monitoring cells) உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைச் சுற்றுக்காவல் திட்டப் பணிகளின் செயல்பாட்டினை சரக துணைக் காவல்

துறை தலைவர்களும், காவல் துறை தலைமை இயக்குநரும் தினந்தோறும் ஆய்வு செய்வார்கள். தமிழ்நாட்டிலுள்ள முக்கிய நெடுஞ்சாலைகளில் இத்திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(13) சுற்றுலாத் தலங்களில், முதல் கட்டமாக நான்கு போக்குவரத்துக் காவல் நிலையங்கள் தோற்றுவித்தல்**

நாளுக்கு நாள் சுற்றுலாத் தலங்களுக்கும், வழிபாட்டுத் தலங்களுக்கும் வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதனால் வாகனப் போக்குவரத்தும் பெருமளவில் உயர்ந்துள்ளது. இதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலையும், விபத்துகளையும், இதர இடையூறுகளையும் சமாளிக்கவும், ஒழுங்குபடுத்தவும், பயணிகளுக்குச் சரியாக வழிகாட்டவும், 16 சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்க உத்தேசித்து, முதற்கட்டமாக, சுமார் 1 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில், கன்னியாகுமரி, வேளாங்கண்ணி, இராமேஸ்வரம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு இடங்களிலும், தலா 1 உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவலர், 3 முதல்நிலைக் காவலர் மற்றும் 16 காவலர்களைக் கொண்ட போக்குவரத்துக் காவல் நிலையங்கள் புதியதாகத் தோற்றுவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

**(14) சிறார் பள்ளிகள் மற்றும் மனமகிழ் மன்றங்கள் உருவாக்குதல்**

குடிசைகளில் வாழும் சிறுவர்களின் ஆற்றலை நல்வழியில் கொண்டு செல்ல, 28 இடங்களில் சிறார் பள்ளி மற்றும் மனமகிழ் மன்றங்கள் பல கால கட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு, கடந்த ஆட்சிக் காலத்தில் 30-6-1999 முதல் அவை செயலிழந்து விட்டன. அந்த நிலைமை இனியும் தொடராது, சிறார்களை இளம் வயதிலேயே நல்வழிப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. எனவே, இந்த ஆண்டு சென்னையில் 25 மன்றங்களும், மாவட்டத்திற்கு ஒன்று வீதம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும், ஆணையரகத்திற்கு இரண்டு வீதமும், ஆக மொத்தம் 66 சிறார் பள்ளி மற்றும் மனமகிழ் மன்றங்கள் 32 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



**(15) 2003-2004 ஆம் ஆண்டில் 12-வது கட்டமாக 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டுதல்**

காவல் துறையிலுள்ள 95,007 காவல் பணியாளர்களில் 37,434 பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டு வசதி தேவையை 43 சதவீத அளவில் நாம் இதுகாறும் நிறைவு செய்துள்ளோம். அகில இந்திய அளவில் 33 சதவீதம் மட்டுமே காவலர்களுக்கு வீட்டுவசதி நிறைவு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. 2003-2004ஆம் ஆண்டிலும் 12-வது கட்டமாக மேலும் 3000 காவலர் குடியிருப்புகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் 126 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்றபோது காவலர்களுக்கு இன்னும் அதிகமாக குடியிருப்புகளை கட்டித்தரவேண்டும் என்று கோரிக்கை வைத்தார். 3,000 குடியிருப்புகள் ஒரு ஆண்டுக்கு கட்டித் தருகிறோம். ஒரு ஆண்டுக்கு இதற்கு 126 கோடி ரூபாய் செலவாகிறது. இதற்குமேல் நிதிக்கு எங்கே போவது? இந்த ஒரு குறைபாட்டினால்தான் இதற்குமேல் எடுத்துக்கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(16) காவல் துறை குடியிருப்பு மற்றும் கட்டடங்களின் சிறப்பு பழுது பார்க்கும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்**

காவல் துறை குடியிருப்பு மற்றும் கட்டடங்களைப் பழுது பார்த்தல், சிறப்பு பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கு ஆண்டுதோறும் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**(17) சீருடைத் தையல் கட்டணம் உயர்த்துதல்**

காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் நிலை வரை உள்ள அலுவலர்களுக்கு இலவசச் சீருடைகளுக்காக வழங்கப்படும் தையல் கட்டணம், விலைவாசி உயர்வின் காரணமாக உயர்த்தி வழங்கப்படும். போக்குவரத்துக் காவல் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தையல் கட்டணம் 280 ரூபாயிலிருந்து 450 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பிற காவல் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தையல் கட்டணம் 200 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக 88.11 இலட்சம் ரூபாய் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(18) காவலர் நல நிதித் திட்டத்தை விரிவுபடுத்துதல்**

காவலர் நல நிதித் திட்டத்தின்கீழ், சிகிச்சை பெறும் காவல் துறையினருக்கு மருத்துவ செலவிற்காக அதிகபட்ச உதவித் தொகையாக 1.5 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் பட்டியலிட்ட நோய்கள், இதற்குத் தகுதியான காவலர் மற்றும் குடும்ப நபர்கள் பற்றி ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு காவல் துறை பணியாளரிடமிருந்து மாதம் 15 ரூபாய் வீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இதற்கு, அரசு ஆண்டொன்றுக்கு 1 கோடி ரூபாய் மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்தில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 145 தனியார் மருத்துவமனைகளுடன், தமிழ்நாட்டிலுள்ள மேலும் 30 மருத்துவமனைகள் இப்பட்டியலில் சேர்க்கப்படும். அத்துடன் மேலும் சில குறிப்பிட்ட நோய்களும் இப்பட்டியலில் இணைக்கப்படும்.

திருமணமான காவலர்களை முழுமையாகச் சார்ந்த பெற்றோர்கள் இத்திட்டத்தில் இதுவரை பயன்பெற வழியில்லை. இக்குறை களையப்பட்டு இந்த ஆண்டு முதல், அவர்களும் இத்திட்டத்தில் பயன்பெற வழிவகை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாதாந்திர சந்தா 15 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக உயர்த்தப்பட்டு, அரசின் மானியத் தொகை ஆண்டொன்றுக்கு இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவரை இருந்து வந்த அதிகபட்ச மருத்துவ உதவித் தொகை 1.5 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாகவும், புற்றுநோய் மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற சில தனி நேர்வுகளில் சிகிச்சையின் தன்மைக்கு ஏற்ப, 6 இலட்சம் ரூபாய் வரையிலும் வழங்கப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12-25

**(19) கணினி வலைசார் குற்றங்களையும் திட்டமிட்ட குற்றங்களையும் புலனாய்வு செய்ய உயர் தொழில் நுட்ப ஆய்வுக்கூடம் அமைத்தல்**

கணினி வலைசார் குற்றங்களையும், திட்டமிட்டு நடத்தப்படும் குற்றங்களையும், புலனாய்வு செய்ய உதவும் வகையில், அதி நவீன வசதிகளுடனும் உயர் தொழில்நுட்பத்துடனும் கூடிய ஆய்வுக்கூடம் ஒன்று குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்கென சென்னையில் 37.37 இலட்சம் ரூபாய் செலவில் 2003-2004 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(20) சென்னை நகர போக்குவரத்து அறிவிப்புக் குறி அமைப்புகளில் LED retrofits பொருத்துதல்**

சென்னை நகர போக்குவரத்து அறிவிப்புக் குறி அமைப்புகளின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள, பராமரிப்பு செலவினங்களைப் பெருமளவு குறைக்கும் வகையிலும், நம்பகத்திறனைக் கூட்டும் வகையிலும், LED அறிவிப்புக் குறிகளையும், வாகன ஓட்டுநர்களுக்குப் பயனளிக்கும் வகையில் காத்திருக்கும் நேரங்காட்டும் காலமானி கருவிகளையும் பொருத்தும் சோதனை முயற்சியில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 1 கோடி ரூபாய் செலவில் LED retrofits மற்றும் காலமானிகள் போக்குவரத்து அறிவிப்புக் குறி அமைப்புகளில் பொருத்தப்படும். இந்த நவீனப்படுத்தும் முயற்சிகளின் பயனாக, மாநகரப் போக்குவரத்தினை நெறிமுறைப்படுத்துதல் பெருமளவில் முன்னேற்றமடையும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(21) தடய அறிவியல் சோதனைக் கூடத்திற்கு நவீனப்படுத்தப்பட்ட அறிவியல் உபகரணங்கள் வழங்குதல்**

தடய அறிவியல் சோதனைகளை நவீனப்படுத்தி, குற்றங்களை திறம்பட கண்டுபிடிக்க ஏதுவாக அகச்சிவப்பு நிறமாலை மானி (I.R. Spectrophotometer) மற்றும் புறஊதா நிறமாலை மானி (U.V. Spectrophotometer) ஆகியவை 11 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**(22) காவல் துறையின் திறனை மேம்படுத்துவதற்காக நவீன ஆயுதங்கள் வழங்கி தாக்கும் திறனை துல்லியமாக்கி அதிகப்படுத்துதல்**

காவல் துறையின் திறனை மேம்படுத்துவதற்காக 276 கேஸ் கன், (Gas Gun) 9 மல்டி பேரல் லாஞ்சர், (Multi-barrel Launcher), 180 இன்சாஸ் ரக துப்பாக்கிகள் (INSAS Rifles) துப்பாக்கிகள் மற்றும் அதற்கான தோட்டாக்கள் போன்ற நவீன ஆயுதங்கள் 96.09 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆண்டு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(23) தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் உயர் தொழில்நுட்பக் கருவிகள் வழங்குதல்**

தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்காக வெடி பொருள் கண்டுபிடிக்கும் கருவி (Explosive Detector), ஆழமாக ஊடுருவி உலோகப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் கருவி (Deep Search Metal Detector), வெடிகுண்டுப் போர்வைகள் (Bomb blankets), வெடிகுண்டைச் செயலிழக்கச் செய்யும் கருவிகள் (Bomb Disposal Equipment) மற்றும் இரவு நேரப் பார்வைக்குப் பயன்படுத்தக்கூடிய கருவிகள் (Night Vision Devices) ஆகியன 87.35 இலட்சம் ரூபாய் செலவில் காவல் துறைக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(24) பயங்கரவாதிகள் மற்றும் கடுங்குற்றம் புரிவோரை கண்காணித்துத் தடுக்க தக்க நவீன கருவிகளை காவல் துறை நுண்ணறிவு பிரிவிற்கு வழங்குதல்**

பயங்கரவாதிகள் மற்றும் கடும் குற்றம் புரிவோரை ஒடுக்குவதில் தமிழ்நாடு அரசு முனைப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். இதில் ஒருபகுதியாக, இக்குற்றங்கள் புரிபவரைத் தொடர்ந்து கண்காணித்து, அவர்களது இரகசிய வன்முறைத் திட்டங்களை தவிடுபொடியாக்க ஏதுவாக, நவீன கருவிகள் 2 கோடி ரூபாய் செலவில் காவல் துறை நுண்ணறிவுப் பிரிவிற்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**(25) மத்திய சிறைச்சாலைகள் அமைந்துள்ள காவல் மாவட்டங்களுக்கு, நீதிமன்றங்களுக்கு கைதிகளை அழைத்துச் செல்வதற்காக கூடுதல் பேருந்துகள் வாங்குதல்**

போராளிகள், தீவிரவாதிகள் மற்றும் அபாயகரமான குற்றவாளிகள் சிறைச்சாலைகளிலிருந்து வெவ்வேறு நீதிமன்றங்களுக்கு வழிக் காவலில் கொண்டு செல்லப்படுகின்றனர். தற்போது 30 பேருந்துகள் இப்பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை போதுமானதாக இல்லாததால்,

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.